மன்றம்

வார ஏடு

ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 6—இதழ் 8 ★ 23 - 6 - 57 சென்னை ★ விலை 16 காசு

திட்டத்துக்குப் பணம்!

——(0)——

விரைவில் குவிந்து, விரைவில் மறையும் மாயங்கள்!

——(0)——

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு பணம் திரட்டப் பலவகைகளும் குறிக்கப்பட்டுள்ளன. வரி விதிப்புகளின் மூலம், கடன் வாங்குவதன் மூலம், சிறு சேமிப்புத் திட்டங்களின் மூலம், இரயில்வே நிதிமூலம் வெளியார் மூலம், வெளியசர் உதவி மூலம் இப்படியாக மொத்தம் 4800 கோடி ரூபாயை இந்த அரசாங்கம் பெற்ருல் தான். போடப்பட்ட இரண்டாவது திட்டம்-அது போட்ட அளவிலேயே நிறைவேற்ற முடியும். இந்த வழிகளில் பணம் கிடைக்கும் என்று திட்டக் குழுவினர் எதிர்பார்த்து திட்டங்களைப்போட்டு விட்டார்களே யன்றி, எதிர்பார்க்கின்ற தொகை வருமா என்பது பல இடங்களில் சந்தேகமே.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் குழுவின் அறிக்கைப் படி, வேண்டிய 4800 கோடி ரூபாய் கீழ்க்கண்டவாறு திரட்டப்படுமெனக் கூறப்படுகிறது.

உள்நாட்டிலிருந்து :—

(கோடி ரூபாய்)

1, வரிகளின் மூலம்		
(அ) தற்போதைய வரி விதிப்புகளின் மூலம் அதிகப்பணம்	350	
(ஆ) புதிய வரிவிதிப்புகளால் அதிகம் பணம்	450	
ஆக		800
2. கடன்களின் மூலம்		
(அ) அரசாங்கக் கடன்கள்	700	
(ஆ) சிறு சேமிப்புத் திட்டம்	500	
ஆக		1200
3. மற்ற வகைகளில்		
(அ) ரயில்வே மூலம்	150	
(ஆ) பிராவிடண்ட் நிதிகள் மூலம்	250	
ஆக		400
4. வெளிநாட்டு உதவி		800
5. பற்ருக்குறை வரவு செலவுத் திட்டம்		1200
6. மற்றவகைகளில் உள் நாட்டிலிருந்து கூடுதலான வருமானம்		400
ஆக		4800

திட்டக்குழுவினர் இந்த 4800 கோடி கணக்கை முன் வைத்துக் கொண்டுதான் 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தை தீட்டியுள்ளனர் திட்டத்தின் அடிப்படையில் வரவு ஒரு பகுதியிலும், செலவு மற்ருெரு பகுதியிலும் பிரிக்கப்பட்டுவிடுவதால் வரவுபகுதி எதிர்பார்க்கப்படாமலேயே செலவு பகுதிகள் வேலை செய்ய ஆரம்பித்து விடுகின்றன.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் போடப்பட்டுள்ள திட்டங்கள் ஒன்ருெடொன்று சங்கிலித் தொடரில் பின்னப்பட்டுள்ள காரணத்தால் ஒன்று நிறைவேற்றினுல் மற்றொன்றை நிறைவேற்றியாக வேண்டுமென்ற தன்மையிலும் மற்ருென்றை நிறைவேற்றினுல் மூன்ருவது ஒன்றை நிறைவேற்ற வேண்டிய அவசியத்திலும் இருக்கிறது. திட்டங்கள் தீட்டப்படும்பொழுது திட்டங்களின் அளவுகளும் எண்ணிக்கைகளும் மிக விரிவுபட்டு வைக்கப்பட்டுவிட்டக் காரணத்தால் அவற்றில் எதையும் நீக்கியோ குறைத்தோ ஐந்தாண்டுத் திட்டத்தை அவர்கள் நிறைவேற்றும்படி வைக்கவில்லை.

உதாரணமாக ஒரு அணைக்கட்டுத்திட்டமென்று ஒன்றை போட்டுவிட்டால் கோடிக் கணக்கான ரூபாய்களை அணைக்கட்டின் ஆரம்ப நிலையிலேயே செலவழித்து விடுகிருர்கள் ஆனுல் அவர்கள் எதிப்பார்த்ததைவிட அதிகமான செலவும், அப்படி அதிகமாக செலவு செய்தாலும் எதிர்பார்த்ததைவிட குறைவான பலன் பின்னுல் தெரியவருகிறது. இருந்தபோதிலும் முதலில் பணம் போட்டுவிட்டக்காரணத்தால் பணத்தை செலவழிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. பிறகு அணைக்கட்டை நம்பி அதற்குப் பக்கத்தில் மின்சார விசைத்திட்டங்களும், மின்சார விசைத் திட்டங்களை நம்பி பலவித தொழில் அமைப்புகளும், புதிய தொழில் அமைப்புகளும், புதிய தொழில் அமைப்புகளை நம்பி ஏராளமான தொழில் அதிபர்களும் முதலாளிகளும் கூடிவிடுகின்றனர். பிறகு அரசாங்கம் விரும்பினுலும் விரும்பாவிட்டாலும்கூட முதலில் ஆரம்பித்தத் திட்டங்களை எப்பாடு பட்டேனும் நிறைவேற்றியாகவேண்டிய நிலை வளர்ந்து விடுகிறது. ஒன்ருேடொன்று

(இரண்டாம் பக்கம் பார்க்க)

நேரு கணக்கு

★

ஒவ்வொருமுதல்த்தேதி யன்றும் ஏகாம்பரம் வீட்டில் வசவு, வாழ்த்துக்கள் இல்லாமலிருக்காது. எல்லாம் அவன் கொண்டு வருகிற சம்பளத்தில் ஏற்படுகிற பற்ருக்குறைதான் காரணம்! ஏகாம்பரத்தின் மனைவி மீனுட்சி, கணக்குப் பார்ப்பதில் மகாக் கெட்டிக்காரி, கால் காசு என்ருலும் அவளிடம் மறைக்க முடியாது. மாதமுழுவதும் ஏற்படுகிற கடன்களை எல்லாம், ஏகாம்பரம் முதல் தேதி தான் அடைத்தாக வேண்டும். அவனுடைய சின்ன உத்தியோகத்துக்குக் "கிம்பளம்" கிடையாது. இந்தக் காலத்தில் கிம்பளம் கொடுப்பவர்கள் பெரிய அதிகாரிகளை முதலில் பிடித்துக் கொள்வதால், ஏகாம்பரம் போன்ற சின்னவர்களைப் பற்றிக் கவலைப் படுவதில்லை. ஆக ஏகாம்பரம் சம்பளத்தை மட்டும் நம்பி அதிலும் தன் மனைவி மீனுட்சியிடமிருந்து தப்பித்துக் கொள்ளக்கூடிய சமார்த்தியத்தை நம்பி சிறு சிறு செலவுகளை—பொடி போடுவதிலிருந்து புதிய சட்டை தைப்பது வரை செய்து கொள்ள வேண்டியிருந்தது.

"பாக்கி பத்து ரூபாய் என்ன ஆயிற்று?" சம்பளப்பையைக் கணக்கிட்ட மீனுட்சிக் கடைசியாக அந்தக் கேள்வியைக் கேட்டதும் நெருக்கடியான கட்டம் வந்து விட்டது என்பதை ஏகாம்பரம் உணர்ந்தான்.

"சட்டைத்துனி எடுக்கக்கொடுத்துள்ளேன்"

"சட்டைத் துணிக்குப் பத்து ரூபாயா?" மீனுட்சி பதற்றத்துடன் கேட்டாள்.

"பத்து ரூபாய் என்ருல் அதிகமா? இப்பொழுதுள்ள பத்து ரூபாய் முன்பு இருந்த இரண்டு ரூபாய் இரண்டறை ரூபாய் மதிப்புதான் இருக்கும் இதோ பார்! பண்டித நேருகூட அப்படித்தான் சொல்லியிருக்கிருர். என்று காரியக் கமிட்டிக் கூட்டத்தில் பண்டித நேரு பேசிய பேச்சை எடுத்துக் காட்டி, ஏகாம்பரம் பேசினுன். எப்பொழுதும் குறுக்கிட்டு மறுக்கிற மீனுட்சி இந்தத் தடவை ஒன்றும் கேட்க வில்லை. நேரு கணக்கால் ஏகாம்பரம் அன்று தப்பித்துக் கொண்டான்.

மறு நாள் ஏகாம்பரம் அலுவலகத்திலிருந்து வந்த பொழுது, மீனுட்சி கடையிலிருந்து திரும்பி வந்தாள். அவள் கையில் ஒரு பெரிய காகித பொட்டலம் இருந்தது.

"என்ன அது?"

"புடவை!"

"என்ன விலை?"

"75 ரூபாய்!"

ஏகாம்பரத்துக்கு மயக்கம் போடும் போலிருந்தது.

"அவ்வளவு விலை கொடுத்து..." அவனுல் பேசக்கூட முடியவில்லை.

"அப்படியென்ன விலை அதிகமாகி விட்டது. இப்பொழுதைய 75 ரூபாய் என்பது முன்பு இருந்த 15 ரூபாய், அல்லது 18 ரூபாய்க்குச் சமமாக இருக்கும் ஒரு புடவை எடுத்துக் கொள்ளக் கூடாதா?"

40 கோடி ரூபாயில் கனரக மின்விசைத் தொழிற்சாலை

—(0)—

போப்பாலில் ஏற்படுத்தப்படும்.

—(0)—

தென்னாட்டில் ஒரு தொழிற்சாலை, ஏற்படுத்துவதென்றால் டில்லி அரசாங்கம் ஒரு தடவைக்குப்பத்து தடவையாகத் தள்ளிப்போடும். கொடுக்கும் திட்டத்தை நானகில் ஒரு பகுதியாக குறைக்கும், மூன்றாவது திட்டத்தில் பார்க்கலாம்சமாதானம் தரும். நிலக்கரியைப் பற்றிய பேச்சு வந்தால், இரும்பு வேண்டுமே என்று சொல்லும். இரும்பு பற்றிய பேச்சு கிளம்பினால், இரும்பை உருக்க நிலக்கரிக்கு எங்கு போவது என்று கோபிக்கும். இப்படி தென்னாட்டிலிருந்து செல்லும் தொழில் திட்டங்கள் டில்லி ஆதிபத்தியத்தால், தளளிவிடப்பட்டிருக்கின்றன. ஏராளமான கனிவளங்களும், தொழில் மயமாக்குவதற்காக இயற்கை வாய்ப்புகளும் தென்னாட்டில் இருந்துங்கூட, டில்லி அரசாங்கம் வடநாட்டைத் தொழில் வளப்படுத்துவதைப் போன்று தென்னாட்டைக் கவனிக்கவில்லை. நிலப்பரப்பிலாகட்டும், மக்கள் தொகைக் கணக்கிலாகட்டும், தென்னாட்டுக்குரிய பங்கு நமக்குத் தரபபடவில்லை.

சேலத்தில் மாக்னசைட் என்னும் கனிவளத்தை வெட்டி எடுக்கும் தொழிலைச் செய்ய, சென்னை அரசாங்கம் முயன்றது. அந்தத் தொழில், இரும்பு உருக்குத் தொழிலுக்கு மிகவும் உறுதுணையாக இருப்பது. 60 ஆண்டுகளாக ஒரு ஆங்கிலக் கம்பெனிக்குத் தரப்பட்டிருந்த நிலைமை 1958ல் முடிவடையும் சமயத்தில், சென்னை மாநில அரசாங்கம் வேறு தனிப்பட்டவர்களுக்குத் தர விருப்பமின்றி பொதுவாகவே நடத்த ஆயத்தமானது. இவ்வளவுக்கும் அந்தத் தொழிலை ஏற்று நடத்த சென்னை அரசாங்கத்துக்குத் தேவைப்பட்டது 2 கோடி ரூபாய்களாகும்.

தென்னாட்டின் தொழில் வளத்தில் டில்லி மத்திய அரசாங்கத்துக்கு உண்மையான அக்கரை இருந்திருக்குமானால், சென்னை அரசாங்கத்துக்கு தேவைப்பட்ட மூலதனத்தை அளித்து உதவியிருக்க வேண்டும். ஆனால் மத்திய அரசாங்கம் சென்னை அரசாங்கத்தின் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளவில்லை.

மாநில அரசாங்கத்துக்குத் தான் உரிமை தரப்படவில்லை என்றால், தென்னாட்டைச் சேர்ந்த ஏதாவது ஒரு கம்பெனிக்காவது உரிமை தரும்படியாவது சென்னை அரசாங்கம் கேட்டுக்கொண்டதாம். அது மறுக்கப்பட்டது.

கடைசியாக, அந்த உரிமை சென்னை மாநிலத்தின் கனிவளத்தைப் பயன்படுத்தும் உரிமை கல்கத்தாவிலுள்ள பர்ன் அண் கம்பெனிக்குத் தரப்பட்டதாகக் கூறப்பட்டது.

இவ்வளவுக்கும் இரண்டு கோடி ரூபாய் மூலதனம் போடுவதற்கான வலிவு, போட்டு நடத்தும் உரிமை சென்னை மாநில அரசாங்கத்துக்கு இல்லாமற்போய்விட்டது, எனவே தென்னாட்டு கனிவளம் வடநாட்டுக் கம்பெனியின் ஆதிக்கத்திற்குத் தரப்பட்டது.

தென்னாட்டில் தொழிற்சாலைகள் ஏற்படுவதென்றால், கையை விரித்திடும் மத்திய அரசாங்கம் வடநாட்டில் புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்திய படிதான் இருக்கிறது.

கனரக மின்சார இயந்திரங்களையும் கருவிகளையும் செய்வதற்காக ஒரு புதிய தொழிற்சாலையை வடநாட்டில், போபால் நகருக்கருகில், டில்லி மத்திய அரசாங்கம் உண்டாக்கப் போகிறார்கள். அதற்குப் போடப் போகும் மூலதனம் 40 கோடி 50 லட்சம் ரூபாய்!

அந்தத் தொழிற்சாலை ஆசியாவிலேய மிகப்பெரிய மின்சாரக் கருவிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாக இருக்குமாம். அது மொத்தம் 10சதுர மைல்களுக்குப் பரந்து இருக்குமாம்.

அந்தத் தொழிற்சாலையில் 9000 தொழில் அனுபவம் பெற்ற நிபுணர்கள் தேவைப் படுவார்கள்.

நன்றாக வளர்ந்தபின் ஆண்டுதோறும் 2000 பேர்கள் அந்தத் தொழிற்சாலையில் பயிற்சிபெற்ற பொறியியல் நிபுணர்களாக மற்ற தொழிற்சாலைகளுக்கு உதவியாக அனுப்பப் படுவார்களாம். இவ்வாறு தொழிற்சாலையை நிபுணர்களைத் தயாரிக்கும் கல்லூரிக்கு 2 கோடி ரூபாய் மூலதனமாக ஒதுக்கப் பட்டிருக்கிறது. உயர்தர படிப்புக்காக 300 பேர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பவும் போபால் தொழிற் சாலை திட்டமிட்டிருக்கிறதாம்.

இன்னும் மூன்று ஆண்டுக்குள் போபால் மின்சாரக் கருவித் தொழிற்சாலை தயாராகி விடுமென்று சொல்கிறார்கள். அதன் பின் இந்தியாவிலுள்ள எல்லா மின்சார நீர்ப்பாசனத் திட்டங்களுக்கும் வேண்டிய இயந்திரங்களும் கருவிகளும் போபால் நகரத் தொழிற்சாலை தருமாம்!

2 கோடி ரூபாய்க்கு வழியில்லாமல், கண்ணெதிரே தென்னாட்டில் இருந்த ஒரு தொழில் துறை வடநாட்டுக் கம்பெனியிடம் அடகுவைக்கப்பட்டு விட்டது. ஆனால் வடக்கிலோ பிலாய் என்றும், ரூர்கேலா என்றும், போபால் என்றும், பூபால் என்றும் ஏராளமான தொழிற்சாலைகள் கோடிக்கணக்கான ரூபாய்களை ஏப்பமிட்டுவளர்ந்துவருகின்றன! (0)

திட்டத்துக்குப் பணம்!

(முன்பக்கத் தொடர்ச்சி)

அதிக தொடர்பு இல்லாமல் அதாவது ஒன்றையொன்று தனியே பிரித்து செய்து முடிக்கக்கூடிய தன்மையில் தொழில் திட்டங்கள் போடப்பட்டிருந்தால் நாட்டின் பொருளாதார நிலைக்கு ஏற்றவாறு திட்டங்களை முடித்திருக்கக் கூடும். ஆனால் பண்டித நேருவும் திட்டகுழுவில் நியோகி தவிர மற்றும் மிருந்தவர்களும் மிக பிரமிக்கத்தக்க ஏற்பாடுகளை செய்வதாக நினைத்துக் கொண்டு இந்தியப் பொருளாதாரத்தால்-அதுகூட அல்ல இந்திய அரசாங்கத்தின் திறமையால் தாங்கமுடியாத ஒரு திட்டத்தைத் தயாரித்து விட்டது.

திட்டம் எவ்வளவு சீரற்ற முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணம் அது ஆரம்பித்த ஒரு ஆண்டிற்குள்ளாகவே அதில் மாறுதல்கள் தோன்றி விட்டது. 1956 மத்தியில் 4800 கோடி முதலில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் 1957 மத்தியில் வருவதற்குள்ளாகவே 5600 கோடி என்றாகிவிட்டது. இன்னும் நான்கு ஆண்டுகளுக்குள் இந்த 5600-ம் 6000 7000 கோடி என்று போய்க்கொண்டிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. திட்டத்தின் செலவுகள் எவ்வளவு வேகமாக வளருகின்றனவோ அதை போட்டியிடும் வேகத்தில் திட்டத்திற்கு கிடைக்கக் கூடிய வருமான வகைகள் குறைந்து கொண்டு போகின்றன. இலவு காத்த கிளிபோல் நீண்டகாலமாக இவர்கள் சொல்லி வந்ததும், எதிர்பார்த்ததும், பண்டிதரும் சர்வபல்லியும் வெளிநாட்டுத் தலைநகரங்கள் தோறும் பவனி வந்ததும் இந்தியாவுக்கு வெளிநாட்டு மூலதனம் கிடைக்க வேண்டுமென்பதற்காக, அந்த நம்பிக்கை வரவரக் குறைந்து போய்விட்டது. 2-வது திட்டத்திற்கு வெளிநாட்டு உதவி அதிகம் கிடைக்காது என்பதை இந்தியத் தலைவர்களே மிக வெளிப்படையாகத் தெரிவிக்கத் தலைப்பட்டுள்ளனர். உள்நாட்டு நிதி நிலைமையிலும் அரசாங்கம் எதிர்பார்கிறபடி 2-வது திட்டத்திற்கு உதவி கிடைக்கப் போகிறதாஎன்பது சந்தேகமே. அரசாங்கம் எவ்வளவோ கணக்குகளைப் போட்டும்கூட கடைசியில் 400 கோடி ரூபாய் மற்ற வருமானங்களிலிருந்து என்றுபோட்டு வைத்துள்ளது. அரசாங்கத்திற்கே அந்த வகை இன்னும் தெரியாது. அரசாங்கத்திற்கு தெரிந்த வகைகளில் கூட தரப்படுகிற புள்ளிவிவரங்கள் சரியானவைகளாக இல்லை. உதாரணமாக சிறு சேமிப்புத் திட்டங்களின் மூலம்-சிறு சேமிப்புத்திட்டங்கள் எப்படி அரசாங்கத்தின் ஆதரவில், விற்கப்படுகிறது என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. அரசாங்கத்தின் கட்டுப்பாடு ஓரளவு தளர்ந்தால் சேமிப்புத்திட்டங்கள் எந்த அளவுக்கு வெற்றி பெறும் என்பதற்கு வடநாட்டில் உத்திரப்பிரதேசத்தில் ஒரு மாவட்டத்தில் நடைபெற்ற சிறு சேமிப்புத் திட்டம் எடுத்துக்காட்டியுள்ளது.

அந்த மாவட்டத்தின் பெயர் எட்டவா. 1956–1957-ம் ஆண்டுக்கு அந்த மாவட்டத்திற்கு 9 லட்சம் ரூபாய் சேமிப்பு திட்டத்தில் அரசாங்கம் எதிர்ப் பார்த்தது. அங்கிருந்த அரசாங்க அதிகாரிகளின் விடா முயற்சியால் சேமிப்புத்திட்டத்திற்கு 25 லட்ச ரூபாய்கள் கிடைத்தது. மாவட்டத்திற்கு போட்ட திட்டம் 9 லட்சம். சேர்க்கப்பட்ட தொகையோ 25லட்சம்ஆக "எட்டவாமாவட்டம் வாழ்க! இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் வாழ்க! சேமிப்புத்திட்டம் வாழ்க! அந்நிய முதலீடு அழிக!" என்றெல்லாம் அந்தமாவட்டத்தில் அரசாங்கம் விழாக்கள் நடத்தியது. "இந்த எட்டவா மாவட்டத்தைப்போல் எல்லோரும் நடந்துகொண்டால் 4,800 கோடி என்ன 10000 கொடியில்கூட ஒரு திட்டத்தை இந்தியா நிறைவேற்ற முடியும்" என்று சில காங்கிரஸ் தலைவர்கள் அங்கு சென்று பேசினார்கள் எட்டவா மாவட்டத்தில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் சிறு சேமிப்புத்திட்டம் அமோக வெற்றியளித்தது என்று அறிவிக்கப் பட்டது. 'வெளிப்பார்வைக்கு நல்ல வெற்றியே!

வெளிப்பார்வை என்று சொன்னதிலிருந்து புரிந்து கொண்டிருக்கலாம்! ஏனென்றால். வெற்றி, விழா, பாராட்டு, இவைகள் எல்லாம் முடிந்தபின் ஒரு பத்திரிக்கை நிருபர் பணம் தபால் நிலையத்தின் சேமிப்பு திட்டத்திற்கு வந்து சேர்ந்த நாட்களை கணக்கெடுத்தார் மிகவும் ஆச்சரியப்படத்தக்க வகையில் மொத்தம் சேர்ந்த 25 லட்சம் ரூபாயில் ஆச்சரியப்படத்தக்க வகையில்

(12-ம் பக்கம் பார்க்க)

மன்றம்

ஞாயிறு 23—6—57 சென்னை

அரண்மனைச் சிக்கனம்!

இந்திய அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்திற்குப்பின், மக்களின் கவனம் அரசாங்கம் செய்யும் வீண் செலவுகளின் பக்கம் திரும்பியுள்ளது. மாற்றுக்கட்சியினர் மட்டுமல்ல, காங்கிரசுக் கட்சியில் இருக்கும் சிலரே அது குறித்துப் பேசவும், வாதாடவும், தீர்மானங்கள் போடவும் ஆரம்பித்துவிட்டனர்.

மக்களைப் பார்த்து "செலவு செய்யாதீர்கள்! சிக்கனமாயிருங்கள்!" என்று காங்கிரசு மந்திரிகள் கேட்கப்போய் "முதலில் நீங்கள் வீணகச்செலவு செய்யாதிர்கள், சிக்கனமாயிருங்கள்!" என்று பொது மக்கள் திரும்பி அவர்களைப் பார்த்துச் சொல்லுங்காலம் வந்து விட்டது.

முதலில் வந்த கூக்குரலையெல்லாம் ஒரு எதிர்ப்பாகவே காங்கிரசுத் தலைமைப் பீடம் எடுத்துக்கொண்டு, அலட்சியப்படுத்த முயன்றது. பிறகு காங்கிரசுக் கமிட்டிக் கூட்டத்தில் "மந்திரிகளின் அதிகப்படியான சம்பளம் 1000 ரூபாய்களுக்கு மேலாகப் போகக்கூடாது!" என்று கொண்டு வரப்பட்ட தீர்மானம் அவர்களுக்கு ஒரு அதிர்ச்சியை உண்டு பண்ணியது. அது பண்டித நேரு முதலியவர்களால் எதிர்த்துப் பேசப்பட்டபின் தோற்கடிப்பட்ட தெனினும், தீர்மானத்திற்கு எதிராக 38 பேர்கள் இருந்தார்களென்றால், ஆதரவாக 32 பேர்கள் இருந்திருக்கிறார்கள். எண்ணப்பட்ட முடிவு கூடச் சரியில்லை என்ற புகார் அப்பொழுது கிளப்பப்பட்டிருக்கிறது. ஆக மிகக்குறைந்த ஏற்றத்தாழ்வில், இரண்டு மூன்று ஓட்டுகள் மாறி விழுந்திருந்தால் முடிவு வேறாகும் விதத்தில், இருந்தது. நேரு பண்டிதரே தீர்மானத்தை எதிர்த்துப் பேசிய பின் ஆறு ஓட்டு வித்தியாசத்தில் தீர்மானம் போயிற்றென்றால், பண்டித நேரு அங்கு பக்கபலமாக இல்லாதிருந்து, தீர்மானம் அதன் போக்கில் விடப்பட்டிருந்தால், நிச்சயம் "மந்திரிகளின் சம்பளம் குறைக்கப்படவேண்டும்" என்ற தீர்மானம் வலியுறுத்தப்பட்டிருக்கும். வலியுறுத்தப்பட்டிருக்கும் என்று கூறுவதற்குக் காரணம், இதற்கு முன்னதாக ஒரு தடவை கராச்சி தீர்மானத்தில் "500 ரூபாய்க்கு மேலாக சம்பளம் கூடாது" எனக் காங்கிரசு இயக்கம் ஒரு தீர்மானத்தைப் போட்டு, நிறைவேற்றி வைத்திருக்கிறது. ஆக இப்பொழுதைய தீர்மானம் காங்கிரசிக்குப் புதிதல்ல, தீர்மானத்தை எதிர்த்துப் பேசுவது தான் புதுமையானது, அதிலும் நேரு பண்டிதர் பேசுவது மேலும் புதுமையானது.

தனிப்பட்டவர்கள் கொண்டுவந்த தீர்மானங்களைத் தோற்கடித்து விட்ட போதிலும், அந்தத் தீர்மானங்களை உண்டாக்கிய சூழ்நிலையை காங்கிரசின் தலைமைப் பீடத்தால் அலட்சியம் செய்ய முடியவில்லை. எனவே மந்திரிகளின் சம்பளத்தில் பத்தில் ஒரு பங்கை விட்டுக்கொடுப்பது என்றும், ஒவ்வொரு மந்திரி பிரிவுக்கும் செலவுகளை மட்டுப்படுத்தி, சிக்கனத்தைப் பரப்ப ஒரு அமைப்பை ஏற்படுத்துவதென்றும் மத்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது. ஆனல் அரசாங்கம் எடுத்துள்ள முடிவுகள் போதுமானவையல்ல!

அரசாங்கத்தின் செலவுத் திட்டங்களைப் பார்க்கும் பொழுது, முதலாவதாகக் கண்ணில் படுவது இராணுவச் செலவு ஆகும். அதைப்பற்றி அரசாங்கம் எந்தச் சிக்கனத்தையும் கையாண்டதாகத் தெரியவில்லை. சென்ற ஆண்டு இராணுவச் செலவு ஒன்றில் மட்டும் 50 கோடி அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது 1956-57ல் 200 கோடி ரூபாய் அளவில் இருந்த இந்திய இராணுவச் செலவு 1957-58ல் 250 கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது. ஏன் 50 கோடி ரூபாய் உயர்ந்துள்ளது? இராணுவச் செலவைப் பற்றிப் பேசினலோ, துரோகிப் பட்டம் கிடைக்குமென அஞ்சிப் பலர் வாயடைத்துள்ளனர். 50 கோடி அதிகம் தேவைதான, வாங்கப்படும் 250 கோடி ரூபாய்ச் சரியாகச் செலவழிக்கப்படுகிறதா? என்று ஆராய யாருக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை.

இராணுவச் செலவுகளில் பெரும்பாலானவை பயன் படாத முறையில், ஒன்றுக்கு மூன்று மடங்கு விலையில், போய்விடுவதுண்டு யுத்தகாலத்தில், படைகளுக்குச் சாமான் வாங்கித்தந்தவர்கள் கண்ட்ராக்ட் எடுத்தவர்கள் எப்படி இலட்சாதிபாதிகளாக, கோடிசுவரர்களாக திடீரென்று ஆனர்கள், என்பது தெரியும்! வெளியில் ஒரு விலை சொல்லப்பட்டால், அதுவே காண்ட்ராக்டர்களின் வழியாகப் படைத்தளத்துக்குப் போகும்பொழுது மூன்று பங்கு விலையாகிவிடும். அதிலும் இந்திய இராணுவத்துக்குச் செலவு செய்யப்படும் கணக்கு சர்க்கஸ் யானைக்கு அல்வாத் துண்டு வாங்கிக்கொடுத்த கணக்காக முடிந்துவிடுவதுண்டு.

அதிலும் பாருக்கெல்லாம் பஞ்சசீலத்தைப் போதித்துக் கொண்டு, உள்நாட்டில் படைபலத்தைப் பெருக்குவதென்றால் அதில் அர்த்தமிருக்காது. அதனல் தான், "இராணுவச் செலவைப் பாதியாகக் குறைக்க வேண்டும்" என்று விநோபாபாவே அவர்கள் கூறுகிறார். நாம் கூறுவது என்றால், எதிர்க்கட்சி என்று தள்ளலாம். ஆனல் இராணுவச் செலவைப் பாதியாக்கும்படி வற்புறுத்துவதோ விநோபா, காந்தியாருக்குப் பின் இந்தியாவின் உத்தமராக விளங்குபவர். அவர் சொல்வதை ஏற்று நடத்தலாம்.

மேலும் நூற்றுக்கணக்கில் வரிகள் போட்டு மக்களின் சக்தியை அபகரிப்பதை விட்டு, இராணுவத்திலும் நிர்வாகத்திலும் இந்திய அரசாங்கம் செய்யும் அதிகச் செலவுகளை மட்டுப் படுத்திக் கொள்ளலாம். 250 கோடி ரூபாய் இராணுவத்திற்காகவும், 190 கோடி நிர்வாகத்திற்காகவும் மத்திய அரசாங்கம் செலவிட முனைந்துள்ளது. இந்த 450கோடிக்கு ஆகும் செலவில் மிச்சப்படுத்த வழிவகைகள் ஏராளமாகவுள்ளன. அவைகளைக் கண்டறிந்து செய்தால், போடப்பட்ட புது வரிகளில் பல தேவையிருக்காது. ○

மன்றம் வார இதழின் சந்தா விபரம்

உள்நாடு (இலங்கையும் சேர்த்து)

இரண்டாண்டு	...	ரூ.	15·00
ஓராண்டு	...	ரூ.	8·00
ஆறுமாதம்	...	ரூ.	4·00
தனி இதழ்	...		16 காசு

இலங்கை சந்தாதாரர்களுக்கு வி. பி. பியில் தனிச் செலவு 75 காசு.

வெளிநாடு (மலேயா-பர்மா)

இரண்டாண்டு	...	ரூ.	18·75
ஓராண்டு	...	ரூ.	10·00

(ஓராண்டிற்கு குறைந்த சந்தா இல்லை)

தனி இதழ்	...	20 காசு

40 கோடி ரூபாயில் கனரக மின்விசைத் தொழிற்சாலை

——(0)——

போப்பாலில் ஏற்படுத்தப்படும்.

——(0)——

தென்னாட்டில் ஒரு தொழிற்சாலை, ஏற்படுத்துவதென்றால் டில்லி அரசாங்கம் ஒரு தடவைக்குப்பத்து தடவையாகத் தள்ளிப்போடும். கொடுக்கும் திட்டத்தை நான்கில் ஒரு பகுதியாக குறைக்கும், மூன்றாவது திட்டத்தில் பார்க்கலாம்சமாதானம் தரும். நிலக்கரியைப் பற்றிய பேச்சு வந்தால், இரும்பு வேண்டுமே என்று சொல்லும். இரும்பு பற்றிய பேச்சு கிளம்பினால், இரும்பை உருக்க நிலக்கரிக்கு எங்கு போவது என்று கோபிக்கும். இப்படி தென்னாட்டிலிருந்து செல்லும் தொழில் திட்டங்கள் டில்லி ஆதிபத்தியத்தால், தள்ளிவிடப்பட்டிருக்கின்றன. ஏராளமான கனிவளங்களும், தொழில் மயமாக்குவதற்காக இயற்கை வாய்ப்புகளும் தென்னாட்டில் இருந்துங்கூட, டில்லி அரசாங்கம் வடநாட்டைத் தொழில் வளப்படுத்துவதைப் போன்று தென்னாட்டைக் கவனிக்கவில்லை. நிலப்பரப்பிலாகட்டும், மக்கள் தொகைக் கணக்கிலாகட்டும், தென்னாட்டுக்குரிய பங்கு நமக்குத் தரபபடவில்லை.

சேலத்தில் மாக்னசைட் என்னும் கனிவளத்தை வெட்டி எடுக்கும் தொழிலைச் செய்ய, சென்னை அரசாங்கம் முயன்றது. அந்தத் தொழில், இரும்பு உருக்குத் தொழிலுக்கு மிகவும் உறுதுணையாக இருப்பது. 60 ஆண்டுகளாக ஒரு ஆங்கிலக் கம்பெனிக்குத் தரப்பட்டிருந்த நிலைமை 1958ல் முடிவடையும் சமயத்தில், சென்னை மாநில அரசாங்கம் வேறு தனிப்பட்டவர்களுக்குத் தர விருப்பமின்றி பொதுவாகவே நடத்த ஆயத்தமானது. இவ்வளவுக்கும் அந்தத் தொழிலை ஏற்று நடத்த சென்னை அரசாங்கத்துக்குத் தேவைப்பட்டது 2 கோடி ரூபாய்களாகும்.

தென்னாட்டின் தொழில் வளத்தில் டில்லி மத்திய அரசாங்கத்துக்கு உண்மையான அக்கரை இருந்திருக்குமானால், சென்னை அரசாங்கத்துக்கு தேவைப்பட்ட மூலதனத்தை அளித்து உதவியிருக்க வேண்டும். ஆனால் மத்திய அரசாங்கம் சென்னை அரசாங்கத்தின் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளவில்லை.

மாநில அரசாங்கத்துக்குத் தான் உரிமை தரப்படவில்லை என்றால், தென்னாட்டைச் சேர்ந்த ஏதாவது ஒரு கம்பெனிக்காவது உரிமை தரும்படியாவது சென்னை அரசாங்கம் கேட்டுக்கொண்டதாம். அது மறுக்கப்பட்டது.

கடைசியாக, அந்த உரிமை சென்னை மாநிலத்தின் கனிவளத்தைப் பயன்படுத்தும் உரிமை கல்கத்தாவிலுள்ள பர்ன் அண் கம்பெனிக்குத் தரப்பட்டதாகக் கூறப்பட்டது.

இவ்வளவுக்கும் இரண்டு கோடி ரூபாய் மூலதனம் போடுவதற்கான வலிவு, போட்டு நடத்தும் உரிமை சென்னை மாநில அரசாங்கத்துக்கு இல்லாமற்போய்விட்டது, எனவே தென்னாட்டு கனிவளம் வடநாட்டுக் கம்பெனியின் ஆதிக்கத்திற்குத் தரப்பட்டது.

தென்னாட்டில் தொழிற்சாலைகள் ஏற்படுவதென்றால், கையை விரித்திடும் மத்திய அரசாங்கம் வடநாட்டில் புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தியபடிதான் இருக்கிறது.

கனரக மின்சார இயந்திரங்களையும் கருவிகளையும் செய்வதற்காக ஒரு புதிய தொழிற்சாலையை வடநாட்டில், போபால் நகருக்கருகில், டில்லி மத்திய அரசாங்கம் உண்டாக்கப் போகிறார்கள். அதற்குப் போடப் போகும் மூலதனம் 40 கோடி 50 லட்சம் ரூபாய்!

அந்தத் தொழிற்சாலை ஆசியாவிலேய மிகப்பெரிய மின்சாரக் கருவிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாக இருக்குமாம். அது மொத்தம் 10சதுர மைல்களுக்குப் பரந்து இருக்குமாம்.

அந்தத் தொழிற்சாலையில் 9000 தொழில் அனுபவம் பெற்ற நிபுணர்கள் தேவைப் படுவார்கள்.

நன்றாக வளர்ந்தபின் ஆண்டுதோறும் 2000 பேர்கள் அந்தத் தொழிற்சாலையில் பயிற்சிபெற்ற பொறியியல் நிபுணர்களாக மற்ற தொழிற்சாலைகளுக்கு உதவியாக அனுப்பப் படுவார்களாம். இவ்வாறு தொழிற்சாலையை நிபுணர்களைத் தயாரிக்கும் கல்லூரிக்கு 2 கோடி ரூபாய் மூலதனமாக ஒதுக்கப் பட்டிருக்கிறது. உயர்தர படிப்புக்காக 300 பேர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பவும் போபால் தொழிற் சாலை திட்டமிட்டிருக்கிறதாம்.

இன்னும் மூன்று ஆண்டுக்குள் போபால் மின்சாரக் கருவித் தொழிற்சாலை தயாராகிவிடுமென்று சொல்கிறார்கள். அதன் பின் இந்தியாவிலுள்ள எல்லா மின்சார நீர்ப்பாசனத் திட்டங்களுக்கும் வேண்டிய இயந்திரங்களும் கருவிகளும் போபால் நகர்த் தொழிற்சாலை தருமாம்!

2 கோடி ரூபாய்க்கு வழியில்லாமல், கண்ணெதிரே தென்னாட்டில் இருந்த ஒரு தொழில் துறை வடநாட்டுக் கம்பெனியிடம் அடகுவைக்கப்பட்டுவிட்டது. ஆனால் வடக்கிலே பிலாய் என்றும், ரூர்கேலா என்றும், போபால் என்றும், பூபால் என்றும் ஏராளமான தொழிற்சாலைகள் கோடிக் கணக்கான ரூபாய்களை ஏப்பமிட்டுவளர்ந்துவருகின்றன! ()

திட்டத்துக்குப் பணம்!

(முன்பக்கத் தொடர்ச்சி)

அதிக தொடர்பு இல்லாமல் அதாவது ஒன்றையொன்று தனியே பிரித்து செய்து முடிக்கக்கூடிய தன்மையில் தொழில் திட்டங்கள் போடப்பட்டிருந்தால் நாட்டின் பொருளாதார நிலைக்கு ஏற்றவாறு திட்டங்களை முடித்திருக்கக் கூடும். ஆனால் பண்டித நேருவும் திட்டகுழுவில் நியோகி தவிர மற்றும் மிருந்தவர்களும் மிக பிரமிக்கத்தக்க ஏற்பாடுகளை செய்வதாக நினைத்துக் கொண்டு இந்தியப் பொருளாதாரத்தால்-அதுகூட அல்ல இந்திய அரசாங்கத்தின் திறமையால் தாங்கமுடியாத ஒரு திட்டத்தைத் தயாரித்து விட்டது.

திட்டம் எவ்வளவு சீரற்ற முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணம் அது ஆரம்பித்த ஒரு ஆண்டிற்குள்ளாகவே அதில் மாறுதல்கள் தோன்றி விட்டது. 1956 மத்தியில் 4800 கோடி முதலில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் 1957 மத்தியில் வருவதற்குள்ளாகவே 5600 கோடி என்றாகிவிட்டது. இன்னும் நான்கு ஆண்டுகளுக்குள் இந்த 5600-ம் 6000 7000 கோடி என்று போய்க்கொண்டிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. திட்டத்தின் செலவுகள் எவ்வளவு வேகமாக வளருகின்றனவோ அதை போட்டியிடும் வேகத்தில் திட்டத்திற்கு கிடைக்கக் கூடிய வருமான வகைகள் குறைந்து கொண்டு போகின்றன. இலவு காத்த கிளிபோல் நீண்டகாலமாக இவர்கள் சொல்லி வந்ததும், எதிர்பார்த்ததும், பண்டிதரும் சர்வபல்லியும் வெளிநாட்டுத் தலைநகரங்கள் தோறும் பவனி வந்ததும் இந்தியாவுக்கு வெளிநாட்டு மூலதனம் கிடைக்க வேண்டுமென்பதற்காக, அந்த நம்பிக்கை வரவரக் குறைந்து போய்விட்டது. 2-வது திட்டத்திற்கு வெளிநாட்டு உதவி அதிகம் கிடைக்காது என்பதை இந்தியத் தலைவர்களே மிக வெளிப்படையாகத் தெரிவிக்கத் தலைப்பட்டுள்ளனர். உள்நாட்டு நிதி நிலைமையிலும் அரசாங்கம் எதிர்பார்கிறபடி 2-வது திட்டத்திற்கு உதவி கிடைக்கப் போகிறதாஎன்பது சந்தேகமே. அரசாங்கம் எவ்வளவோ கணக்குகளைப் போட்டும்கூட கடைசியில் 400 கோடி ரூபாய் மற்ற வருமானங்களிலிருந்து என்றுபோட்டு வைத்துள்ளது. அரசாங்கத்திற்கே அந்த வகை இன்னும் தெரியாது. அரசாங்கத்திற்கு தெரிந்த வகைகளில் கூட தரப்படுகிற புள்ளிவிவரங்கள் சரியானவைகளாக இல்லை. உதாரணமாக சிறு சேமிப்புத் திட்டங்களின் மூலம்—சிறு சேமிப்புத்திட்டங்கள் எப்படி அரசாங்கத்தின் ஆதரவில், விற்கப்படுகிறது என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. அரசாங்கத்தின் கட்டுப்பாடு ஓரளவு தளர்ந்தால் சேமிப்புத்திட்டங்கள் எந்த அளவுக்கு வெற்றி பெறும் என்பதற்கு வடநாட்டில் உத்திரப்பிரதேசத்தில் ஒரு மாவட்டத்தில் நடைபெற்ற சிறு சேமிப்புத் திட்டம் எடுத்துக்காட்டியுள்ளது.

அந்த மாவட்டத்தின் பெயர் எட்டவா. 1956–1957-ம் ஆண்டுக்கு அந்த மாவட்டத்திற்கு 9 லட்சம் ரூபாய் சேமிப்பு திட்டத்தில் அரசாங்கம் எதிர்ப்பார்த்தது. அங்கிருந்த அரசாங்க அதிகாரிகளின் விடாமுயற்சியால் சேமிப்புத்திட்டத்திற்கு 25 லட்ச ரூபாய்கள் கிடைத்தது. மாவட்டத்திற்கு போட்ட திட்டம் 9 லட்சம். சேர்க்கப்பட்ட தொகையோ 25லட்சம்ஆக "எட்டவாமாவட்டம் வாழ்க! இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் வாழ்க! சேமிப்புத்திட்டம் வாழ்க! அந்நிய முதலீடு அழிக!" என்றெல்லாம் அந்தமாவட்டத்தில் அரசாங்கம் விழாக்கள் நடத்தியது. "இந்த எட்டவா மாவட்டத்தைப்போல் எல்லோரும் நடந்துகொண்டால் 4,800 கோடி என்ன 10000 கொடியில்கூட ஒரு திட்டத்தை இந்தியா நிறைவேற்ற முடியும்" என்று சில காங்கிரஸ் தலைவர்கள் அங்கு சென்று பேசினார்கள் எட்டவா மாவட்டத்தில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் சிறு சேமிப்புத்திட்டம் அமோக வெற்றியளித்தது என்று அறிவிக்கப் பட்டது. வெளிப்பார்வைக்கு நல்ல வெற்றியே!

வெளிப்பார்வை என்று சொன்னதிலிருந்து புரிந்து கொண்டிருக்கலாம்! ஏனென்றால். வெற்றி, விழா, பாராட்டு, இவைகள் எல்லாம் முடிந்தபின் ஒரு பத்திரிக்கை நிருபர் பணம் தபால் நிலையத்தின் சேமிப்பு திட்டத்திற்கு வந்து சேர்ந்த நாட்களை கணக்கெடுத்தார் மிகவும் ஆச்சரியப்படத் தக்க வகையில் மொத்தம் சேர்ந்த 25 லட்சம் ரூபாயில் ஆச்சரியப்படத்தக்க வகையில்

(12-ம் பக்கம் பார்க்க)

மன்றம்

ஞாயிறு 23—6—57 சென்னை

அரண்மனைச் சிக்கனம்!

இந்திய அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்திற்குப்பின், மக்களின் கவனம் அரசாங்கம் செய்யும் வீண் செலவுகளின் பக்கம் திரும்பியுள்ளது. மாற்றுக்கட்சியினர் மட்டுமல்ல, காங்கிரசுக் கட்சியில் இருக்கும் சிலரே அது குறித்துப் பேசவும், வாதாடவும், தீர்மானங்கள் போடவும் ஆரம்பித்துவிட்டனர்.

மக்களைப் பார்த்து "செலவு செய்யாதீர்கள்! சிக்கனமாயிருங்கள்!" என்று காங்கிரசு மந்திரிகள் கேட்கப்போய் "முதலில் நீங்கள் வீணைகச்செலவு செய்யாதிர்கள், சிக்கனமாயிருங்கள்!" என்று பொது மக்கள் திரும்பி அவர்களைப் பார்த்துச் சொல்லுங்காலம் வந்து விட்டது.

முதலில் வந்த கூக்குரலை யெல்லாம் ஒரு எதிர்ப்பாகவே காங்கிரசுத் தலைமைப் பீடம் எடுத்துக்கொண்டு, அலட்சியப்படுத்த முயன்றது. பிறகு காங்கிரசுக் கமிட்டிக் கூட்டத்தில் "மந்திரிகளின் அதிகப்படியான சம்பளம் 1000 ரூபாய்களுக்கு மேலாகப் போகக்கூடாது!" என்று கொண்டு வரப்பட்ட தீர்மானம் அவர்களுக்கு ஒரு அதிர்ச்சியை உண்டு பண்ணியது. அது பண்டித நேரு முதலியவர்களால் எதிர்த்துப் பேசப்பட்டபின் தோற்கடிப்பட்ட தெனினும், தீர்மானத்திற்கு எதிராக 38 பேர்கள் இருந்தார்களென்றால், ஆதரவாக 32 பேர்கள் இருந்திருக்கிறார்கள். எண்ணப்பட்ட முடிவு கூடச் சரியில்லை என்ற புகார் அப்பொழுது கிளப்பப்பட்டிருக்கிறது. ஆக மிகக்குறைந்த ஏற்றத்தாழ்வில், இரண்டு மூன்று ஓட்டுகள் மாறி விழுந்திருந்தால் முடிவு வேறாகும் விதத்தில், இருந்தது. நேரு பண்டிதரே தீர்மானத்தை எதிர்த்துப் பேசிய பின் ஆறு ஓட்டு வித்தியாசத்தில் தீர்மானம் போயிற்றென்றால், பண்டித நேரு அங்கு பக்கபலமாக இல்லாதிருந்து, தீர்மானம் அதன் போக்கில் விடப்பட்டிருந்தால், நிச்சயம் "மந்திரிகளின் சம்பளம் குறைக்கப்படவேண்டும்" என்ற தீர்மானம் வலியுறுத்தப்பட்டிருக்கும். வலியுறுத்தப்பட்டிருக்கும் என்று கூறுவதற்குக் காரணம், இதற்கு முன்னதாக ஒரு தடவை கராச்சி தீர்மானத்தில் "500 ரூபாய்க்கு மேலாக சம்பளம் கூடாது" எனக் காங்கிரசு இயக்கம் ஒரு தீர்மானத்தைப் போட்டு, நிறைவேற்றி வைத்திருக்கிறது. ஆக இப்பொழுதைய தீர்மானம் காங்கிரசிக்குப் புதிதல்ல, தீர்மானத்தை எதிர்த்துப் பேசுவது தான் புதுமையானது, அதிலும் நேரு பண்டிதர் பேசுவது மேலும் புதுமையானது.

தனிப்பட்டவர்கள் கொண்டுவந்த தீர்மானங்களைத் தோற்கடித்து விட்ட போதிலும், அந்தத் தீர்மானங்களை உண்டாக்கிய சூழ்நிலையை காங்கிரசின் தலைமைப் பீடத்தால் அலட்சியம் செய்ய முடியவில்லை. எனவே மந்திரிகளின் சம்பளத்தில் பத்தில் ஒரு பங்கை விட்டுக்கொடுப்பது என்றும், ஒவ்வொரு மந்திரி பிரிவுக்கும் செலவுகளை மட்டுப்படுத்தி, சிக்கனத்தைப் பரப்ப ஒரு அமைப்பை ஏற்படுத்துவதென்றும் மத்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது. ஆனால் அரசாங்கம் எடுத்துள்ள முடிவுகள் போதுமானவையல்ல!

அரசாங்கத்தின் செலவுத் திட்டங்களைப் பார்க்கும் பொழுது, முதலாவதாகக் கண்ணில் படுவது இராணுவச் செலவு ஆகும். அதைப்பற்றி அரசாங்கம் எந்தச் சிக்கனத்தையும் கையாண்டதாகத் தெரியவில்லை. சென்ற ஆண்டு இராணுவச் செலவு ஒன்றில் மட்டும் 50 கோடி அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது 1956-57ல் 200 கோடி ரூபாய் அளவில் இருந்த இந்திய இராணுவச் செலவு 1957-58ல் 250 கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது. ஏன் 50 கோடி ரூபாய் உயர்ந்துள்ளது? இராணுவச் செலவைப் பற்றிப் பேசினாலோ, துரோகிப் பட்டம் கிடைக்குமென அஞ்சிப் பலர் வாயடைத்துள்ளனர். 50 கோடி அதிகம் தேவைதானா, வாங்கப்படும் 250 கோடி ரூபாய்ச் சரியாகச் செலவழிக்கப்படுகிறதா? என்று ஆராய யாருக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை.

இராணுவச் செலவுகளில் பெரும்பாலானவை பயன்படாத முறையில், ஒன்றுக்கு மூன்று மடங்கு விலையில், போய்விடுவதுண்டு யுத்தகாலத்தில், படைகளுக்குச் சாமான் வாங்கித்தந்தவர்கள் கண்ட்ராக்ட் எடுத்தவர்கள் எப்படி இலட்சாதிபாதிகளாக, கோடிசுவரர்களாக திடீரென்று ஆனார்கள், என்பது தெரியும்! வெளியில் ஒரு விலை சொல்லப்பட்டால், அதுவே காண்ட்ராக்டர்களின் வழியாகப் படைத்தளத்துக்குப் போகும்பொழுது மூன்று பங்கு விலையாகிவிடும். அதிலும் இந்திய இராணுவத்துக்குச் செலவு செய்யப்படும் கணக்கு சர்க்கஸ் யானைக்கு அல்வாத் துண்டு வாங்கிக்கொடுத்த கணக்காக முடிந்துவிடுவதுண்டு.

அதிலும் பாருக்கெல்லாம் பஞ்சசீலத்தைப் போதித்துக் கொண்டு, உள்நாட்டில் படைபலத்தைப் பெருக்குவதென்றால் அதில் அர்த்தமிருக்காது. அதனால் தான், "இராணுவச் செலவைப் பாதியாகக் குறைக்க வேண்டும்" என்று வினோபாபாவே அவர்கள் கூறுகிறார். நாம் கூறுவது என்றால், எதிர்க்கட்சி என்று தள்ளலாம். ஆனால் இராணுவச் செலவைப் பாதியாக்கும்படி வற்புறுத்துவதோ வினோபா, காந்தியாருக்குப் பின் இந்தியாவின் உத்தமராக விளங்குபவர். அவர் சொல்வதை ஏற்று நடத்தலாம்.

மேலும் நாற்றுக்கணக்கில் வரிகள் போட்டு மக்களின் சக்தியை அபகரிப்பதை விட்டு, இராணுவத்திலும் நிர்வாகத்திலும் இந்திய அரசாங்கம் செய்யும் அதிகச் செலவுகளை மட்டுப் படுத்திக் கொள்ளலாம். 250 கோடி ரூபாய் இராணுவத்திற்காகவும், 190 கோடி நிர்வாகத்திற்காகவும் மத்திய அரசாங்கம் செலவிட முனைந்துள்ளது. இந்த 450கோடிக்கு ஆகும் செலவில் மிச்சப்படுத்த வழிவகைகள் ஏராளமாகவுள்ளன. அவைகளைக் கண்டறிந்து செய்தால், போடப்பட்ட புது வரிகளில் பல தேவையிருக்காது. ○

மன்றம் வார இதழின் சந்தா விபரம்

உள்நாடு (இலங்கையும் சேர்த்து)

இரண்டாண்டு	...	ரூ.	15·00
ஓராண்டு	...	ரூ.	8·00
ஆறுமாதம்	...	ரூ.	4·00
தனி இதழ்	...		16 காசு

இலங்கை சந்தாதாரர்களுக்கு வி. பி. பியில் தனிச் செலவு 75 காசு.

வெளிநாடு (மலேயா-பர்மா)

இரண்டாண்டு	...	ரூ.	18·75
ஓராண்டு	...	ரூ.	10·00

(ஓராண்டிற்கு குறைந்த சந்தா இல்லை)

தனி இதழ்	...	20 காசு

வினு: ஆடம்பரப் போக்குகளை அகற்றிவிட்ட காங்கிரஸ் அமைச்சர்களின் செயல் பாராட்டப்பட வேண்டியதல்லவா?

விளக்கம்: வீண் ஆடம்பரப் போக்குகளை அகற்றி விட்ட எந்த அமைச்சரும், குறிப்பாக இந்தியத்துணைக் கண்டத்தைப் பொறுத்த வரையில், பொதுவாகப் பாராட்டப்பட வேண்டியவர் தான். ஆனல் வீண் ஆடம்பரப் போக்குகளை அறவே அகற்றிவிட்ட காங்கிரசு அமைச்சர்களைப் பார்க்கவு முடியவில்லை; அவர்களைப் பாராட்டவும் வழி கிடைக்கவில்லை.

வெள்ளையர் ஆட்சிக்காலத்தில் இந்தியாவில், ஆளவந்தார்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்த ஆடம்பரங்களையெல்லாம் தம் வாய் கிழியவும், கேட்போர் செவி கிழியவும் வெறுத்துப்பேசி முழக்கமிட்டு வந்த காங்கிரசுக்காரர்கள், தம் ஆட்சிக் காலத்தில் அந்த ஆடம்பரங்களையெல்லாம் ஒன்று, பத்து, நூருகப் பெருக்கிக் கொண்டிருக்கிருர்களே ஒழிய, அவற்றில் ஒன்றைக் கூட குறைத்துக் கொள்ளவில்லை.

நாடாளும் அமைச்சர் போன்ற பெரும் பொறுப்பிலிருப்பர்கள், அப்பொறுப்பின் மதிப்பை உயரச் செய்யக்கூடிய சில கட்டுப்பாடுகளையும், ஒழுங்கு முறைகளையும், கவர்ச்சிகரமான சூழ்நிலைகளையும் அமைத்துக்கொள்வது தவறல்ல என்று தான் 'நாம் எண்ணியும், கூறியும் வருகிருேம். உற்ருர் உறவினர் நண்பர் பொதுமக்கள் ஆகியோரின் தவருன தூண்டுதல்களுக்கு இரையாகாதவாறு காப்பாற்றிக்கொள்ளும் வகையில் தனி வீட்டு வசதி, தனிக் கார் வசதி தனி உதவியாளர்கள் வசதி போன்றவற்றை அமைச்சர்கள் ஏற்படுத்திக் கொள்ளுவதும் தவறல்ல. அமைச்சர் பதவிக்கு மதிப்பு அளித்துப் பிறர் நடந்து கொள்ளவேண்டியதும், அந்த நிலையில் அமைச்சர் பதவி வைக்கப்படவேண்டியதும் இன்றியமையாதனவேயாகும். தேவையற்றனவும், தவிர்க்கக் கூடியனவும், வரிப் பணத்தைப் பாழாக்கக் கூடியனவுமான வீண் ஆடம்பரங்கள் அறவே ஒழிக்கப்படவேண்டும் என்று தான் நாம் சொல்லி வருகிருேம்.

ஆனல் இந்த அளவுக்குக் கூட உயர்வையோ, மதிப்பையோ, விரும் பாதவர்களாகக் காட்டிக் கொண்டவர்களும், தாமே நூற்றுத் தாமே நெய்து தாமே கட்டிக் கொள்ளுதல், தமக்கு வேண்டிய சிறு தேவைகளைத் தாமே இயற்றிக் கொள்ளுதல், குடிசையில் வாழ்தல் சுதேசப் பொருள்களைமட்டுமே பயன்படுத்துதல், அரை நிர்வாணியாக இருத்தல், ஆடம்பரத்தை ஒழித்தல் போன்ற எளிய வாழ்க்கையில் நாட்டமுள்ளவர்களாகச் சொல்லிக் கொண்டவர்களும், தாம் அமைச்சர் பதவி ஏற்ருல் ரூபாய் ஐந்நூற்றிற்கு மேல் சம்பளம் வாங்கமாட்டோம் என்று வீராப்புப் பேசியவர்களும் ஆன காங்கிரசுக்காரர்கள் வெள்ளையன் செய்து காட்டாத ஆடம்பரங்களையெல்லாம் அளவுக்கு மீறிச் செய்து வருகிருர்கள். வெள்ளையன் காலத்தில் இருந்த ஆடம்பரங்களிலே ஒன்று கூடக் குறையவில்லை என்பது மட்டுமல்ல; இருந்த ஆடம் பரங்கள் ஒன்றுக்குப் பத்தாகப் பெருகிக் கிடக்கின்றன.

வெள்ளைக்கார வைசிராயும், கவர்னரும் பவனிகள் வரும் போது செய்துகொண்ட ஏற்பாடுகளையெல்லாம் கண்டவாறு தூற்றிய காங்கிரசுக்காரர்கள், அவற்றையெல்லாம் இப்பொழுது விட்டுவிட்டார்களா என்ருல், அதுதான் இல்லை! வைசிராய் எப்பொழுதாவது பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை சென்னைபோன்ற முக்கிய நகரங்களுக்கு மட்டும் வருவார். ஆனல் இப்பொழுதுள்ள இந்தியக் குடியரசுத் தலைவரோ எனில் ஆண்டுக்கு மூன்றுமுறை வருகிருர். வைசிராய் எப்படிப் போலீசுப் பட்டாளமும், போர்வீரர் பட்டாளமும் புடைசூழ ஆறுகுதிரை பூட்டிய கோச்சுவண்டியில் பவனி வந்தாரோ, அப்படியேதான் இந்தியக்குடியரசுத் தலைவரும் டில்லியில் அடிக்கடி பவனி வருகிருர். வெள்ளைக்காரன் காலத்தைவிட இப்பொழுது அதிகப்படியான போலீசுப் பாதுகாப்பு அதிக அளவில், அதிக நாட்களுக்கு, அதிக இடங்களுக்குத் தேவைப்படுகிறது. வெள்ளைக்கார வைசிராயோ அல்லது கவர்னரோ பவனி வருகிருர்கள் என்ருல், எப்படிப் பொது மக்கள் சாலைகளில் நடமாடவொட்டாதபடி தடுத்து நிறுத்தப்படுவார்களோ, அப்படிப்பட்ட கடுபிடிகள் அளவுக்கு மீறிக் குடியரசுத் தலைவர் வந்தாலும் சரி கவர்னர் வந்தாலும் சரி, சாதாரண அமைச்சர் வந்தாலும் சரி இந்தக்காலத்தில் நடைபெறுகிறது.

இந்தியப் பிரதமர் பண்டித நேரு சென்னைக்கு வந்து வேலூர் செல்லுகிருர் என்ருல் ஆயிரக் கணக்கான போலீசார் பிற மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்டுச் சாலைகள் நெடுகப் பாதுகாப்புக்காக நிறுத்திவைக்கப் படுகிருர்கள். போலீசுக் காரர்கள் சாலைகளிலுள்ள ஆலமரம், அரசமரம், புளியமரம், பூவரசு மரம் ஆகிய மரங்களுக்குக் கீழே நின்று நேரு வந்து சென்ற பிறகு மூட்டை முடிச்சுக்களுடன் தத்தம் ஊர்களுக்குச் செல்லுகிருர்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பண்டித நேரு சென்னை வந்து செங்கற்பட்டு, வடஆற்காடு, சேலம், திருச்சி, தஞ்சை, தென்ஆற்காடு, பாண்டிச்சேரி ஆகிய மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்தார். அப்போது அரசாங்கத்தின் சார்பாகவே ஆடம்பரமான வரவேற்பு நிகழ்ச்சிகள் ஆங்காங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. மேற் கூறப்பட்ட மாவட்டங்களிலிருந்த போலீசார் போதாதென்று, மதுரை இராமநாதபுரம், திருநெல்வேலி, கோவை ஆகிய மாவட்டங்களிலிருந்து போலீசார் வரவழைக்கப்பட்டிருந்தார்கள். வழி நெடுக நூறு அடிக்கு ஒரு போலீசுக்காரர் நிறுத்திவைக்கப்பட்டிருந்தார். அந்தச்சுற்றுப்பயணத்தின்போது சென்னை அரசியலார்க்கு மட்டும் ஏற்பட்ட செலவு ரூபாய் பத்தரைலட்சம் என்ருல், எப்படிப்பட்ட ஆடம்பரங்கள் நடந்தேறியிருக்க வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் தாமே ஊகித்து அறிந்து கொள்ளலாம். அதே ஆண்டில் குடியரசுத் தலைவர் இராசேந்திரபிரசாத் தென்னுட்டில் சுற்றுப்பயணம் செய்த போது சென்னை அரசியலார்க்கு மட்டும் ஏற்பட்ட செலவு ரூபாய் பதினென்றரை லட்சம் ஆகும். பண்டித நேருவும், இராசேந்திர பிரசாத் அவர்களும் குறைந்தது ஆண்டுக்கு ஒருதடவையாவது தமிழகத்திற்கு வரத் தவறுவதில்லை. அவர்களைத்தவிர இங்குள்ள அமைச்சர்கள் திங்களுக்கு இருபது நாட்கள் வெளியூர் சுற்றுப் பயணத்திலும், ஆடம்பர வரவேற்பு நிகழ்ச்சிகளிலும் காலங்கழித்து வருகின்றனர். இங்குள்ள கலெக்டர்கள், பிற ரெவினியூ அதிகாரிகள், டி. எஸ். பி. கள், பிற போலீசு அதிகாரிகள் ஆகியவர்க்கு அமைச்சர்கள் பின்னல் சுற்றிச் சுற்றி வருவதற்கும், அமைச்சர்க்குப் பாதுகாப்புவசதிகள், வரவேற்பு ஏற்பாடுகள் ஆகியவைகள் செய்வதற்குத்தான் நேரமிருக்கிறதேயல்லாமல், அலுவலக வேலைகளைக் கவனிக்க நேரமிருப்பதில்லை.

பொதுமக்களே விரும்பி, பொதுமக்கள் செலவில் அமைச்சர்களுக்கு வரவேற்பு ஏற்பாடுகள் செய்வதில் தவறில்லை. அதிக நாட்களை அப்படிப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சிகளில் செலவழியாமல் பார்த்துக்கொள்ள, வேண்டியது தான் அமைச்சரின் கடமையாக இருக்கும். ஆனல் அரசாங்கத்தின் செலவில், வரிப் பணத்தைப் பாழாக்கிக் கொண்டு செய்யும் சுற்றுப்பயணம் போன்ற ஆடம்பரங்களை அமைச்சர்கள் ஒழித்தார்களா என்ருல் இல்லை!

காரிலிருந்து கொடியை அகற்றுதல், நகரசபை வரவேற்பு இதழ்களைப் பெறுதல் போன்ற சிற்சில ஆடம்பரங்களை ஒழித்துவிடப் போவதாக அமைச்சர்கள் சொல்லிக் கொண்டிருக்கிருர்கள். அவற்றைக்கூட நடைமுறையில் ஒழிக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிருர்கள். அமைச்சர்களின் கார்களில் கொடிகள் இன்னமும் பரந்துகொண்டுதானிருக்கின்றன.

வெள்ளைக்காரன் வைத்திருந்த சர், திவான்பகதூர், ராவ்பகதூர், ராவ் சாகிப் போன்ற பட்டங்களை ஒழித்துவிட்டு, அந்த ஆடம்பரத்தை அறவே அகற்றிவிடப் போகிருேம் என்று கூறினுர்கள். இப்பொழுது பத்மபூஷண் போன்ற பல்வேறு பட்டங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிருர்கள்.

இன்றைய காங்கிரசு ஆளவந்தார்கள் வெள்ளைக்காரன் காலத்திய ஆடம்பரங்களின் அளவைப் பெருக்கிக் கொண்டிருக்கிருர்களே ஒழிய குறைக்கவில்லை; அவர்களால் குறைக்கஇயலாது அந்த அளவுக்கு அவற்றில் அவர்கள் மயங்கிக் கிடக்கிருர்கள் என்பது அவர்களது போக்கிலிருந்து தெரிய வருவதை உணரலாம்!

—இரா. நெ

சிறுகதை

மாங்காய் மாலை

பரமானந்தம் பெருமூச்சு விட்டார்.

"என்ன செய்வது கமலம்? அவள் என்ன சின்னக் குழந்தையா அடித்துத் திருத்த, அல்லது மிரட்டிப் பணிய வைக்க? வயது வந்த பெண். படித்த பெண். இந்த வருஷம் அவளுக்குக்கல்யாணம் நடந்துவிட்டால் அடுத்த வருஷமே உன் மடியில் ஒரு பேரனோ பேத்தியோ விளையாடுவார்கள். விளக்கெண்ணையாக இருந்தாலாவது பாலடையால் புகட்டிவிடலாம். இது கல்யாண விஷயமாயிற்றே! கல்யாணம் அவளுக்கு. அவள் விருப்பத்துக்கு மாறாக என்ன செய்ய முடியும்?"

"ஏன், என் தம்பிக்கு என்ன குறைச்சலாம்?" என்று படபடப்போடு கேட்டாள் கமலம்.

"உன் தம்பி சுந்தரம் நல்லவன் தான். இல்லையென்று சொல்லவில்லை. அழகானவன் திறமை சாலி. அவனுக்கு நமது பத்மாவைக் கொடுப்பதில் எனக்கும் ஆசைதான். ஆனால் பதமாவல்லவா ஆசைப்படவேண்டும்."

"பிடிக்கவில்லை என்று சொன்னால் மட்டும் சரியாகிவிட்டதா? அதற்கு ஏதாவது காரணம் வேண்டாமா?"

"என்னைக் கேட்டால்! பெற்றவளுக்கல்லவா தெரியவேண்டும் பெண்ணின் மனது."

"அதை அவள் எங்கே நினைத்துப் பார்க்கிறாள். ஊரார் சும்மாவா சொல்லுகிறார்கள்! அவள் அம்மாவின் பெண் அல்ல. அப்பாவின் பெண் என்று."

பரமானந்தம் புன்முறுவல் பூத்தார்.

"பரவாயில்லையே, நீ கூட நன்றாகப் பேச ஆரம்பித்துவிட்டாயே!"

"என் பேச்சைக் கேட்டு அப்புறம் மகிழ்ச்சி கொண்டாடலாம். முதலில் உங்கள் அருமைப் பெண்ணுக்கு ஒரு வழியைப் பாருங்கள்." என்று சொல்லிக்கொண்டே அடுப்பங்கரையை நோக்கி எழுந்து நடந்தாள்.

பத்மாவைப் பற்றிய எண்ணங்கள் அவர் மனதில் எழுந்தன. கமலத்தின் பேச்சு அவருக்கு, அவர் இன்னும் செய்து முடிக்காத அந்தக் கடமையை சுட்டிக் காட்டியது, அதனால் மீண்டும் அவரிடமிருந்து ஒரு பெரு மூச்சு கிளம்பியது!

* * *

பரமானந்தம் பெரு மூச்சு விட்டுக் கொண்டிருந்த அதே வேளையில், அவரது செல்லப் பெண் பத்மா, மங்கலான இருள் நிறைந்த கடற்கரையில் நின்று கொண்டு, ராகவன் சென்ற திசையைப் பார்த்து, பெரு மூச்சு விட்டாள்.

"அவன் போய்தான் அரை மணி நேரமாகிறதே இன்னுமா அப்படியே நிற்க வேண்டும்! பாவம், கண் பூத்து விடப் போகிறது."

பழக்கமில்லாத இந்தக் குரலைக் கேட்டதும் பத்மா திடுக்கிட்டுத் திரும்பினாள். எதிரே நின்றிருந்த உருவத்தைப் பார்த்ததும் பயம் அவள் நெஞ்சைத் தீண்டியது.

தனக்கு எதிரே நின்றிருந்தவன் ரிக்ஷா இழுப்பவனாகவோ, ரயில்வேக் கூலியாகவோ, மீன் பிடிப்பவனாகவோ, அல்லது மில் தொழிலாளியாகவோ இருக்க வேண்டுமென்று பத்மா நினைத்தாள். பார்ப்பதற்கு அப்படித்தான் தோற்றமளித்தான். மேனமினுக்கி ஜாதிக்குரிய பகட்டோ பளபளப்போ அவனிடமில்லை. எவனெவனோ சுகபோகமாக வாழ தன்னைத்தானே பாழாக்கிக்கொள்ளும் 'இளிச்சவாய்' ஜாதியைச் சேர்ந்தவன் என்பது தெளிவாகத் தெரிந்தது!

மறைமுதல்வன்

அவனை எங்கோ பார்த்திருப்பது போன்ற ஒரு எண்ணமும் அவள் மனதில் தோன்றியது. ஆனால் அதைப் பற்றி அப்போது அவள் சிந்திக்க தயாராக இல்லை.

"உன்னை யார் இங்கே அழைத்தது? நீ உன் வேலையை பார்த்துக் கொண்டு போ" என்று மிரட்டினாள்.

அவன் அதை லட்சியம் செய்யாமல் சிரித்தான்.

"அது எப்படி முடியும்? உன்னைப் போன்ற ஒரு நல்ல பெண், அநியாயமாக இப்படி கெட்டுப் போவதை என்னால் சகிக்க முடியவில்லை,"

அடுப்படியில் வேலையாக இருக்கும்போது, நெருப்பின் நிழல் அவள் முகத்திலடிக்குமே, அதுபோல இப்போது அவள் முகம் கோபத்தால் சிவந்தது.

"ஏய், நீ இப்போது மரியாதையாகப் போகிறாயா அல்லது சத்தம் போடட்டுமா?"

"நீ சத்தம் போட்டு கூட்டம் கூட்டினால் எனக்கொன்றும் நஷ்டமல்ல. இதைவிட எத்தனையோ பங்கு மோசமான அவமானங்களை அனுபவித்தவன் நான். ஆனால், உனக்குத்தான் வீணை கெட்டபெயர் வரும். இது சென்னை! அடித்தவனுக்கு அனுதாபங் காட்டுகிற ஊர்! தெரிகிறதா?"

என்ன செய்வதென்று புரியாத அவள் சுற்று முற்றும் பார்த்தாள்.

'ஏன் இப்படி மிரளுகிறாய்? நான் ஒன்றும் உன்னோடு விளையாட வரவில்லை. நீ விழுந்து கிடக்கும் படுகுழியிலிருந்து கைதூக்கி விடத்தான் வந்தேன். இதோ, நான் யார் என்று தெரிகிறதா பார்! இல்லையென்றால், இந்த நகையைப் பார். இப்போது உனக்குப்புரியும்" என்று சொல்லிக்கொண்டே மடியிலிருந்து ஒரு நகையை எடுத்துக் காட்டினான்.

அது ஒரு மாங்காய் மாலை!

மாங்காய் போன்ற உருவத்தில், பொன்னால் சின்ன சின்னதாக செய்யப்பட்டு கோர்க்கப்பட்ட அழகான தங்கச் சங்கிலி! அதன் அழகை, கவர்ச்சியான ஒரு இளம் பெண்ணின் வெண்மையும், மழமழப்பும், சதைப் பிடிப்பும் கொண்ட கழுத்தில் கிடக்கும் போதுதான், பூரணமாக ரசிக்கமுடியும்! (நகைகளுக்கு ஒரு அழகும் அந்தஸ்தும் ஏற்படுவதே, அதை அணிந்து கொள்ளும் சித்திரப் பாவைகளால் தான் என்பது இந்தக் கதாசிரியரின் தாழ்மையான கருத்தாகும்!)

அந்த மாங்காய் மாலையைப் பார்த்ததும் பத்மாவின் இதயத்தில் மீண்டுமொரு அதிர்ச்சி விழுந்தது. அந்த நகையையும் அவனையும் மாறி மாறி பார்த்தாள்.

ஒரு வாரத்துக்கு முன்பு நடந்த அந்த நிகழ்ச்சி பத்மாவின் கண் முன்னால் பளிச்சிட்டது.........

* * *

அன்றும் இதே நேரந்தான்! இதே இடந்தான்!

அப்போது தான் இருள் மண்ணில் இறங்கி இருந்தது, சாய்ந்து கிடந்த உடைந்த படகொன்றின் அருகே பத்மாவும் ராகவனும் இளமை தந்த கொஞ்சுதல்களில் திளைத்துக் கொண்டிருந்தனர்!

ராகவனுக்கும் பத்மாவுக்கும் எப்படி பழக்க மேற்பட்டது, அந்தப் பழக்கம் எப்படி இவ்வளவு தூரம் பழுத்தது என்பதெல்லாம் ஆராய்ச்சிக்குத் தேவையில்லாத விஷயங்கள். ஏனெனில் அது சென்னை!

மனதிலே துணிச்சலு கையிலே காசுமிருந்தால் திக்கவும், சரசமாடவும், சங் டம் வந்தால் தீர்த்துக் கொ ளவும் எத்தனையோ வழிவ கள் உண்டு!

பத்மாவிடம் ஒரு தரம் பார் தால் திரும்பவும் பார்க் வைக்கிற அழகிருந்தது-ப வத்துக்குரிய ஆசைகளு இருந்தன!

அனுபவமும் தைரியமு இல்லாதவர்கள் பத்மாவி மிருந்த அழகைப்பார்த் பெரு மூச்சு விடுவதோ நிறுத்திக் கொண்டார்கள் ஆனால் ராகவனுக்கு பத்ம வின் அங்கங்களில் ததும்பி எழிலை மட்டுமல்லாமல், அவ பார்வையில், அலை மோதி தாபத்தையும் புரிந்து கொ ளும் 'வ்வகார அறிவு'! இரு தது! அதனால் அவன் அ ளுடைய கனவுகளுக்கு உயிரு உருவமுமானான்! இருள் த விய கடற்கரை மணலில் இ பத்தின் பூவிதழ்கள் பூரித்து குலுக்கின!

அன்று அவர்கள் கடற் ரையை விட்டுக்கிளம்ப 'நே மாகிவிட்டது. அதுவும் பத்ம பல முறை நச்சரித்த பிறகு!

தன் மடியில் சாய்ந்து கிடந் ராகவனின் தலையைப் பிடித் அசைத்துக்கொண்டே பத்ம சொன்னாள்.

"இதென்ன, இப்படி படு துக்கொண்டே இருந்தால் நேரமாகிவிட்டதே, வீட்டுக்கு போக வேண்டாமா எழுந் ருங்கள்."

"ஊஹு-ம்! எனக்கு சுகமா தூக்கம் வருகிறது."

"வரும் வரும்! வீட்டுக்கு போய் பட்டு மெத்தை போ டுக்கொண்டு ஆனந்தமாக தூங்குங்கள்."

"ஆனால் உன் மடியில் தூ கும் சுகம் அந்தப் பட்டுமெ தையில் இல்லையே, என் செய்வேன்."

"அதற்குத்தான் சொல் கிறேன், என்னையும் உங்க வீட்டுக்கு அழைத்துப் போ கள் என்று!"

அவள் மடியிலிருந்து ரா வன் துள்ளி எழுந்தான்.

"எனக்கு மட்டும் ஆ யில்லையா பத்மா? எனக் நல்ல வேலை ஒன்று கிடை கும் வரை நம் கல்யாணத்தை ஒத்திவைக்க வேண்டிய தான். நீ படித்தவள். உனக்கு கூடவா சொல்லவேண்டும்."

"அது சரி, அப்பாவும் அ மாவும் சும்மா இருக்கிறார்கள் எப்படியாவது கல்யாண செய்து விடவேண்டுமென் இருக்கிறார்கள். என்ன ஆ றதோ!"

இந்த நினைவு வந்த உ னேயே பத்மாவின் முகம் வா டமடைந்தது.

"அடாடா, மறந்தே வி டேனே!" என்றான் ராகவ திடீரென்று.

"என்னது!"

"உனக்காக ஒன்று வாங்கி வந்தேன். அதைத்தர மறந்தே போனேன். என்னவென்று சொல் பார்க்கலாம்"

யோசித்துப் பார்த்தாள் பத்மா. ஒன்றும் புலப்படவில்லை.

"எனக்குத் தெரியவில்லை. நீங்களே காட்டுங்கள்"

"பெண்களுக்கு மிகவும் பிடித்தமான பொருள்கள் மூன்று. பூ, புடவை, பொன்னகை. அதில் ஒன்று இது." என்று சொல்லிக்கொண்டே பையிலிருந்ததை எடுத்தான் ராகவன்.

அது ஒரு மாங்காய் மாலை! அந்த இருளிலும் அந்த தங்கச் சங்கிலி மின்னியது!

பத்மாவின் முகத்தில் பூரிப்பு கொள்ளவில்லை.

"இது எனக்கா!" என்று கேட்கும் போதே அவள் கன்னம் சிவந்தது.

"உனக்கே உனக்குத்தான்" என்று சொல்லிக்கொண்டே அவள் கழுத்தில் அந்த நகையை தன் கையாலாயே அணிவித்தான் ராகவன். அப்படியே அவள் கன்னத்தில் ஒரு முத்தமும் வைத்தான்!

"ஆரம்பித்து விட்டீர்களே மறுபடியும்" என்று செல்லக் கோபத்தோடு அவன் முகத்தை அப்பால் தள்ளினாள் பத்மா. ராகவன் சிரித்தான்!

"ஆமாம், இதை எப்படி வாங்கினீர்கள்? விலை நிறைய இருக்குமே!"

"இந்த நகைக்கு விலை அதிகமிருக்கலாம். ஆனால் உன்னிடம் நான் கொண்டுள்ள அன்பின் விலையை உன்னால் கணிக்க முடியுமா? அல்லது நினைத்தாலும் போதைதரும் உன் அழகின் விலையை இந்த உலகத்தால்தான் கணிக்க முடியுமா? அல்லது..."

"போதும் போதும், ஆரம்பித்துவிடாதீர்கள்." என்று அவன் வாயைப் பொத்தினாள் பத்மா.

"சரி, அப்படியானால் இந்தக் கன்னத்தில் ஒரே ஒரு..."

"எல்லாம் நாளைக்கு" என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள் பத்மா. ராகவனும் எழுந்தான்.

இருவரும் புறப்பட ஆயத்தமானபோது, அவர்கள் எதிர்பாரா வண்ணம், நெடிய உருவமும் கட்டமைந்த உடலும் கொண்ட ஒருவன் அவர்களை வழி மறிப்பது போல வந்து நின்றான்! அவன் கையில் விரிக்கப்பட்ட பேனாக்கத்தி பளபளத்தது!

"ஏய், என்னது" என்று ராகவன் குளறினான். பத்மா பயத்தால் அவனை அணைத்துக்கொண்டாள்.

"மரியாதையாக அந்த நகையைக் கொடுத்து விடுங்கள். இல்லாவிட்டால் குத்திக் கொன்றுவிடுவேன்"

பத்மாவுக்கு அந்த பயத்திலும் ஒரு அசட்டுத் துணிச்சல்!

"முடியாது...யாராவது இருந்தால் ஓடிவாருங்களேன் ...திருடன்"

அந்தத்திருடன் பத்மாவின் கூச்சலைக்கேட்டதும் கத்தியை ஓங்கினான். உடனே ராகவன் அவள் வாயைப் பொத்தினான். சற்று முன்புதான் பத்மாவின் கழுத்தில் அணிவித்த அந்த மாங்காய்மாலையைக் கழற்றி திருடனிடம் நீட்டினான். அதை வாங்கிக்கொண்ட திருடன் விடுவிடென்று அருகேயிருந்த படகின் பின் புறம் மறைந்து போனான்!

ஏதோ சொல்லிவைத்தாற் போல் இந்தநிகழ்ச்சி இரண்டே நிமிடத்தில் நடந்து முடிந்து விட்டது!

"ஆசையோடு வாங்கிவந்தீர்களே, அது கடைசியில் இப்படிப் போய்விட்டதே!" என்று பத்மா குலுங்கி குலுங்கி அழுதாள்.

"போனால் போகிறது பத்மா அழாதே! நாளை இன்னொன்று வாங்கித் தருகிறேன். கண்ணைத்துடைத்துக்கொள்" என்று ராகவன் சமாதானப் படுத்தினான்!

ஆனால் வீட்டுக்குச் சென்ற பின்னரும் பத்மாவுக்கு கலக்கம் தீரவில்லை. வேறு நகையை பறிகொடுக்க நேர்ந்திருந்தால் கூட அவள் இத்தனை வருத்தப்பட்டிருக்க மாட்டாள். ஆனால் ராகவன் ஆசையோடு வாங்கிவந்தது தங்கவில்லையே என்பதுதான் அவளை சுலபத்தில் அமைதி அடையவிடவில்லை!

* * *

ஒருவாரத்துக்கு முன்பு நடந்த இந்த நிகழ்ச்சி பத்மாவின் நினைவில் கண்மூடிக் கண் திறக்கும் நேரத்திற்குள் மின்னி மறைந்தது.

பத்மா மீண்டும் ஒருமுறை தன் எதிரே நின்றவனை ஏற இறங்கப் பார்த்தாள். அன்று வந்த அதேதிருடன்தான்! அவன் கையிலிருப்பதும் அதே மாங்காய்மாலைதான்! பத்மாவுக்குப் பயமும் ஆத்திரமும் ஒரேசமயத்தில் பொங்கின.

"இன்று எதைக் கொள்ளையடிக்க வந்தாய்?" என்று எரிச்சலோடு கேட்டாள்.

அந்தத்திருடன் சிரித்தான்.

"இன்று நான் திருடவில்லை. அன்று திருடிய நகையை திருப்பித்தர வந்தேன். இந்தா, இதை வாங்கிக்கொள்" என்று அந்த மாங்காய் மாலையை அவளிடம் நீட்டினான்.

சிறிது நேரம் ஏதோயோசித்துவிட்டு அதை வாங்கிக் கொண்டாள் பத்மா. இத்தகைய அதிசயத் திருடனை அவள் கதைகளில்கூட படித்ததில்லை! இதெல்லாம் உண்மையா அல்லது ஏதாவது சதியா என்றுகூட பயந்தாள்!

"ஆச்சரியமாக இருக்கிறதா உனக்கு! ஆனால் நான் சொல்லப்போகும் செய்தியைக் கேட்டால் நீ மயங்கியே கீழே விழுந்துவிடுவாய்." என்றான் அந்தத்திருடன்.

"ஏதாவது சொல்லவேண்டியிருந்தால் சொல்லு, வீணாக சுற்றி வளைக்காதே" என்று அவசரப்படுத்தினாள் பத்மா.

"அந்தநகை பொன்னல்ல; தங்கமுலாம் பூசிய பித்தளை."

பத்மாவின் காதுகளில் அலை ஓசை 'கும்' மென்று அடைத்தது!

"அந்தநகை பித்தளை என்பது தெரிந்ததுமே உன்னைப் பார்த்துச் சொல்லவேண்டுமென்று அலைந்தேன். பாவம், பார்த்தால் நல்ல பெண்ணாக இருக்கிறாய். படித்த பெண்ணாகவும் தெரிகிறது. இப்படிப்பட்ட அயோக்கியப் பயல்களிடம் ஏமாறலாமா? இந்தக்காலத்தில் வெளிப் பகட்டை நம்பவே கூடாதம்மா..."

அந்தத் திருடன் தன் அனுபவத்தில் கண்ட உண்மைகளை உபதேச பாணியில் சொல்லிக் கொண்டிருந்தான். ஆனால் அது ஒன்றும் பத்மாவின் நெஞ்சில் படவில்லை!

ராகவன் பரிசளித்த மாங்காய்மாலை வெறும் பித்தளை என்பது தெரிந்ததுமே பத்மா அதிர்ச்சியில் சுற்றுச் சூழலை மறந்துவிட்டாள்.

பத்மா அவனிடம் எத்தனை அன்பு கொண்டிருந்தாள்! எதிர்காலத்தைப்பற்றி எவ்வளவு இனிமையான கனவுகளை மனதில் பின்னிவைத்திருந்தாள்! அவனை மணம் புரியத் தவங்கிடந்த உறவுக்காரன் சுந்தரத்தை எப்படி இரக்கமின்றி நிராகரித்தாள! இனி எல்லாம் வீண்! நினைத்தது நாசமாகி விட்டது! நம்பிக்கை பொய்த்து விட்டது! தங்கம் பித்தளையாகி விட்டது! ராகவன் அவளிடமிருந்து ஒரே வினாடியில் வெகு தூரம் விலகி விட்டான்! முலாம் பூசிய அந்த மாங்காய் மாலைக்கும் அவனுக்கும் வேறுபாடே இல்லை!......

பத்மா நினைத்து நினைத்துப் பொருமினாள்.

அவளுக்கு சுயநினைவு வந்ததும் எதிரே பார்த்தாள். அந்தத் திருடனைக் காணவில்லை! அவன் எப்போதோ போய் விட்டான்!

மெள்ள 'மெரினா' சாலையை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். அவள் கையிலிருந்த அந்த மாங்காய் மாலை நழுவி மணலில் விழுந்தது. ஆனால் அவள் அதைத் திரும்பிக்கூட பார்க்கவில்லை!

சாலைக்கு வந்ததும் பத்மா வடக்குப் பக்கமாகத் திரும்பி நடக்க ஆரம்பித்தாள். சாலை ஓரத்தில் நின்று கொண்டிருந்த கார்கள் அப்போதுதான் ஒவ்வொன்றாகக்கிளம்பிப் போய்க் கொண்டிருந்தன! அவளுக்கு முன்னால் யாரோ இருவர் உரத்த குரலில் பேசிக் கொண்டு சென்றனர்...

"இந்தக் காலத்திலே சார், வேஷம் போடுவது மிக எளிதாகி விடுகிறது. உள்ளத்துக்கும் உதட்டுக்கும் உறவே இருப்பதில்லை. யாரை நம்புவது யாரை நம்பாமலிருப்பது என்பதே புரிய வில்லை...."

"நீங்கள் சொல்வது சரியான வார்த்தை எனக்கு ஒரு நண்பர் இருந்தார் பாருங்கள்..."

திருவல்லிக் கேணிக்குப் போகும் திருப்பம் வந்ததும் பத்மா திரும்பி நடந்தாள். அவளுக்கு முன்னால் பேசிக் கொண்டு வந்த இருவரும் 'மெரினா'வில் நேரே நடந்து போனார்கள்.

* * *

அன்றிரவு சாப்பிட்டுக் கொண்டிருந்த பரமானந்தம் பத்மாவைப் பார்த்து ஆச்சரியத்தோடு கேட்டார்.

"என்ன சொன்னாய், பத்மா! சுந்தரத்தையா கல்யாணம் செய்து கொள்கிறேன் என்கிறாய். நேற்று வரை முடியாது என்று பிடிவாதம் பிடித்தாயே!"

கமலம் குறுக்கிட்டாள்.

"நேற்றுச் சொன்னதற்கு இன்று என்ன வந்தது! சரி என்று சொல்லிவிட்டு ஆக வேண்டியதைப் பார்க்காமல், ஏன் எப்படி என்று விசாரணை பண்ணிக் கொண்டிருக்கிறீர்களே!" என்றாள் கமலம்.

கமலத்துக்கு, பத்மாவின் மனம் மறுபடியும் மாறிவிடுவதற்குள் கல்யாணத்தை முடித்து விட வேண்டுமென்ற எண்ணம்!

பரமானந்தம் மகளின் மன மாறுதலைப் புரிந்து கொள்ள முடியாமல் தவித்தார். மாங்காய் மாலையின் 'மகத்துவம்' மட்டும் புரிந்திருந்தால் அவர் அப்படி ஆச்சரியப்பட்டிருக்க மாட்டார்! 0

வாழ்க்கை வளர!

கணவன் மனைவி ஆகிய இருவரும் ஒருவரையொருவர் நன்கு உணர்ந்துகொண்டும், ஒருவரையொருவர் போற்றிப் புகழ்ந்துகொண்டும், ஒருவரிடத்திலுள்ள குறையை மற்றொருவர் தம் நிறைவால் நிறைவு செய்து கொண்டும், ஒருவரை ஒருவர் உளமார உள்ளன்புடன் நட்பு செய்தால் அதுவே உண்மைக் காதலாய் விரிந்து-பரந்து-வளர்ந்து நிற்கும்.

—டாக்டர்

"அணுவும் அண்டமும்"

உலகநாடுகள் ஒவ்வொன்றும், தனித்தனியாகவோ கூட்டாகவோ, முழக்கங்கள்மூலமோ அறிக்கைகள் விடுத்தோ ஆயுதக் கட்டுப்பாடு, தேவை படைக்கலன்களின் தொகை குறைக்கப்படவேண்டும்என்று கூறி வருகின்றன. தேவைப்பட்டால் ஐக்கியநாடுகள் மன்றத்தின் சட்ட திட்டங்களைத் திருத்தியாவது, புதியஆயுதங்களை வைத்துக்கொண்டு உலகத்தை அச்சுறுத்திவரும் வல்லரசுகளை பணியவைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளன. உலகப்பெரும் அறிவியல் மேதைபெட்ரண்ட் ரஃசல், இருண்ட ஆப்பிரிக்க காடுகளிலே தங்கி இலவச மருத்துவப் பணிபுரிந்துவரும் தொண்டுகிழவர்தத்துவஞானி, ஆல்பர்ட் சுவைட்சர் செர்மன் நாட்டு மாபெரும் விஞ்ஞானி மார்க்சுபார்ன் போன்ற மனித இன வளர்ச்சியிலே, வாழ்விலே அக்கரையும், நல்லெண்ணமும் கொண்ட அறிவுக்கடல்களெல்லாம் இன்று படைக்கலன் பெருக்கத்தை எதிர்த்துக் கொதித்தெழுகின்றனர். ஏன்? தென்னிந்தியாவில் திரு. இராசகோபால ஆச்சாரியார்கூட ஆயுதக் கட்டுப்பாட்டின் தேவைகுறித்து அறிக்கைமேல் அறிக்கைவிட்டு அகிலத்தின் கவனத்தைத் தன்பக்கம் திருப்பியுள்ளார். இதே பிரச்சினையை வற்புறுத்தி சப்பான் போன்ற நாடுகளிலே கிளர்ச்சிகள் வளர்ந்து வருவதாக செய்தித்தாள்கள் வலியுறுத்துகின்றன. அண்மையில் கீழ்நாடுகளில் சுற்றுப்பயணம் செய்த சப்பான் முதல்வர் தோழர் 'கிசி' ஒவ்வொரு நாட்டுமுதல்வரோடும் ஆயுதக்கட்டுப்பாடு குறித்து கூட்டறிக்கை விட்ட வண்ணம் உள்ளார். சப்பான் இத்துறையில் அதிக ஆர்வமும் அக்கரையும் கொண்டுள்ளதற்கு முக்கிய காரணம் அது ஒரு சுடுபட்டபூனை.

கென்றி. எல்.ச்டிம்சன் தலைமையில் அமைக்கப்பட்ட இடைக்காலக்குழு 1954 சூன் முதல்நாள் ஏகமனதாக எடுத்துக்கொண்ட முடிவின்படி 1945, ஆகச்டு 6, 9 ஆகியநாட்களில் முறையேதென்சப்பான் பாதுகாப்புப் படையின் தலைமைக்களமும், படைக்கலப் பொருட்களின் சேமிப்பு நிலையமுமான இரோசிமா, தொழில்வளம் நிறைந்த நகரும், முக்கிய துறைமுகப் பட்டினமுமான நாகாச்சி என்ற இடங்களில் முதல் அணுக்குண்டுகள் வீசப்பட்டன. இரோசிமாவில் வீசப்பட்ட அணுக்குண்டு யுரேனியத்தை மூலப்பொருளாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது. இதன் வீச்சால் இரோசிமாவில் 4.1சதுர மைல்பரப்பளவில் புல்பூண்டுகூட முளைக்கமுடியாத அளவிற்கு சேதம் ஏற்பட்டுள்ளது. கண்ணாடி உருகி தண்ணீர்போல் ஓடியது. மருத்துவமனை ஒன்றில் இருந்த சன்னல்கள் பெயர்த்து எடுக்கப்பட்டு ஒரு மைலுக்கப்பால் கொண்டு வீசப்பட்டன. ஏறத்தாழ 60,000 மக்கள் எழுந்த தீயில் மட்டும் எரிந்து கரிந்துள்ளனர். தகர்ந்த கட்டிடங்கட்டும் வீழ்ந்த மரங்கட்டும் இடையே சிக்கிச் சிதைந்தவர்கள் எத்தனையோ. நாகாச்சியில் பயன்படுத்தப்பட்ட அணுக்குண்டு 'ப்ளுட்டோனியம்' என்ற மூலப்பொருளால் தயாரிக்கப்பட்டது. ஏறத்தாழ இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கான வீடுகள் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டன. சுட்டெரிக்கப்பட்டு சாம்பலாக சுடுகாடாகக் காட்சியளித்தவீடுகள்மட்டும் 55,000. நகாச்சியில் ஒருமைல் சுற்றளவு சுடுகாடாகவே காட்சியளித்ததாம். இந்த விவரங்களையெல்லாம் கட்டுரை ஒன்றில் மேசர் அலக்சாண்டர். பி. டி. செவர்ச்கி என்பவர் தருகிறார். இந்த அளவிற்கு பெருஞ்சேதம் விளைத்த அணுக்குண்டு பற்றி சிக்காகோ விஞ்ஞானிகள் 'சப்பானில் போடப்பட்ட அணுக்குண்டுகள, இன்னும் பத்துப் பதினைந்து ஆண்டுகட்குப் பின் தயாரிக்கப்படும் அணுக்குண்டுகளோடு ஒப்பநோக்கும் பொழுது வெறும்பட்டாசாகவே காட்சிதரும் என்று கூறினார்கள். அவர்கள் கூற்றை இன்று விஞ்ஞானிகள் உலகம் மெய்ப்பித்துவிட்டது. இன்று பத்துமைல் சுற்றளவிற்கு பச்சைகளைக்கூட பார்க்கமுடியாத அளவிற்கு பாழ்நிலமாக்கும் வன்மை பெற்றதும், இன்னும் பலமைல் தூரங் கட்கெல்லாம் அதன் அழிவு ஆற்றல் பரவிநிற்கும் தன்மை உடையதுமான புதுரக நீரகக் குண்டுகள் இன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சிக்காகோ நகரையும் அதன் சுற்றுச் சார்பு, சூழ்ந்துள்ள இடங்களையும் உலகப் படத்திலிருந்து அழித்துவிடும் அளவிற்கு இரோசிமாவில் வீசப்பட்டதைவிட ஆயிரம்மடங்கு ஆற்றலுள்ள நீரகக்குண்டு இன்று வல்லரசுகளின் கையிலே இருக்கிறது. மார்ச் 1954ல் நடந்த சோதனையில் எலுகலாப் என்ற இடத்தில் கால்மைல் அகலம்-அரை மைல் நீளமுள்ள இடம் இருந்த நிலம் தெரியாமல் மறைந்து விட்டது. கடல்மட்டத்தில் தண்ணீர் மேலே தூக்கி எறியப்பட்டதால் ஏற்பட்ட குழி ஒருமைல் விட்டமுடையதும் 175 அடி ஆழமுள்ளதும் 17மாடி கட்டிடம் ஒன்றை புதைத்துவைக்கும் அளவிற்கு கன அளவு உள்ளதுமாக அமைந்தது. ஆறு மைல்விட்டம் கொண்டு வரையப்படும் வட்டம் முழுதும் அதன் அழிவாற்றல் பரந்து நின்றது. ஏழுமைலுக்கு அப்பால்கூட பெருமளவிற்கு சேதம் ஏற்பட்டதாம். பத்து மைலுக்கப்பாலும் அதன் அழிவுச்சக்தியை உணர முடிந்ததாம். 50 இலட்சம் மக்கள் தொகை கொண்ட எந்த நகரையும் இதுபோன்ற ஒரு குண்டால் அழித்துவிட முடியுமாம். இரண்டு மூன்று குண்டுகளைக் கொண்டு ஒரு சிறிய நாட்டையே உருத்தெரியாமல் சிதைத்துவிட இயலுமாம். ஐரோப்பாக்கண்டத்தில் பால்டிக் கடலிலிருந்து சுவிட்சர்லாந்துவரை 20மைல் அகலமுள்ள ஒருவளையத்தை 30 நீர

கக் குண்டுகள் தூள் தூளாக்
கும் வன்மை பெற்றுள்ளதாம்
ஒரு மெகாடன் நீரகக்குண்டு
முந்நூறு அடி தூரத்திற்கு
அப்பால் நிற்கும் பதினேழாயி
ரம்பேரை மரணக்குழிக்கு
அழைத்துச் செல்லும் ஆற்
றல் பெற்றதாம். 1954 மார்ச்
நான்காம்நாள் பிக்கினி என்ற
இடத்தில் சோதனை செய்யப்
பட்ட நீரகக் குண்டின் ரேடியக்
கதிர் வீச்சால், சோதனையால்
அழிவு ஏற்படும் பகுதி என்று
அறிவிக்கப்பட்ட அபாய வட்
டத்திற்குப் பலமைல்கட்கு அப்
பால் சென்று கொண்டிருந்த
'லக்கி டிரேகன்' என்ற சப்பா
னிய மீன்பிடிக்கும் கப்பலில்
23 பேர் பாதிக்கப்பட்டனர்; ஒரு
வர் புதைகுழிக்கும் அனுப்பப்
பட்டார். கழிந்த பன்னிரண்டு
ஆட்டுகளில் சப்பான் நாட்டில்
பிறந்த குழந்தைகளுள் அங்க
ஊனர்கள் தொகை அதிகா
கக் காணப்படுகிறது. பல
புதிய புதிய வியாதிகளும் பரவி
வருவதாகக் கூறப்படுகிறது.
லிக்கிமியா, புற்றுநோய் போன்
றவைகளெல்லாம் இந்த கதிர்
வீச்சினுல் அதிகமாக வளர்
துள்ளதாம். சில திங்கள்ட்கு
முன்னுல் கல்கத்தாவில் காய்
கறிகளிலும்கூட கதிர்வீச்சின்
ஆற்றல் படிந்துள்ளதாக
கூறப்பட்டது. 'நியூயார்க்டைம்
சின்' விஞ்ஞானப்பகுதி ஆசி
ரியரான வால்டிமார் காம்ப்பர்
எழுதிய ஏடு ஒன்றில் இச்
செய்திகளையெல்லாம் தரு
கிறார். இத்தகைய கொடிய
தொரு படைக்கலத்தின்
தோற்றமும் வளர்ச்சியும் சுவை
யான செய்தி!

ஒருகல்லை உடைத்து
உடைத்துச் சிறிதாக்கிக்
கொண்டே போனுல், அதை
மீண்டும் சிறிதாக்க முடியா
ஒருநிலை ஏற்படும்பொழுது, ந
கையிலிருக்கும் மிக நுண்ணிய
கல்லின் ஒருகூறின் பெய
தான் அணு. ஆங்கிலத்தில்
ஆட்டம் என்பார்கள்
ஆட்டம் என்றுல் துண்டிக்
முடியாதது என்றுபொருள்
ஏறத்தாழ 2500 ஆண்டுகட்கு
முன்னுல் கிரேக்க நாட்டு த
துவஞானியான டெமாக்கிரட
என்பவர் எல்லாப் பொரு
களும் பகுக்க முடியாத மி
நுண்ணிய அணுக்களா
ஆனது என்று கூறினு
பத்துகோடி அணுக்க
வரிசையாக அடுக்கிவைத்தா
ஏறத்தாழ ஒரு அங்குல நீள
மட்டுமே வரும் என்ப
லிருந்து அணுவின் நுண்ணி
தன்மையை நாம் அறிந்
கொள்ளலாம். இச்சிறிய அணு
வினுள்ளே ஒரு அண்ட
அடங்கிக் கிடக்கிறது. சூரி
னைச்சுற்றி உலகம் போன்
கோள்கள் சுற்றிவருவதுபோ
'அணுக்கரு' வைச்சுற்றி மி
னுருக்கள் சுற்றிவருகின்றன
அணுக்கருவுக்கும், மின்னுரு

சமுதாயம் . . .

புதியன காணவேண்டும், அறியவேண்டும் என்ற அவா பெருகியுள்ள காலம் இது. அந்த ஆவல் தான் இருள் நிறைந்த காட்டில் திரிந்துகொண்டிருந்த மனிதனை ஒளியுமிழந்து விளங்கும் நாகரிக நகரங்களில் நடமாடத் தூண்டியது. மேலும் மேலும் அறியவேண்டும் என்ற விருப்ப மேலீட்டால் உந்தப்பட்ட மனிதன், ஒவ்வொரு பொருளின் நுட்பத்தையும், அதன் இயற்கைப் பண்பையும், இயக்கத்தையும், மாறுதலையும் கண்டறிந்து அவற்றை வாழ்க்கைக்குப் பயன்படுத்த துடித்துக் கொண்டிருக்கிறுன். அவாவிய கருத்து நிறைவேறும்போது மனதில் மகிழ்ச்சி ஏற்படுவது இயற்கை. அந்த மகிழ்ச்சி உள்ளத்திற்கு இன்பம் பயக்கிறது. இன்பம் நுகர வேண்டி, மகிழ்ச்சி தரத்தக்க பொருள்களின் மேலெல்லாம் உள்ளம் தாவுகிறது. அந்த உள்ளம் வெண்ணிலாவைக் காண விழைகிறது; நீலத்திரைக்கடலில் நீந்துகிறது; தென்றலில் உலாவுகிறது; வெண்மணற்பரப்பில் விளையாடுகிறது; பச்சைப் பைங்கூழைக் கட்டி அணைக்கிறது; அருவியில் ஆடுகிறது; எழில் மலைமேல் ஏறுகிறது; மாடமாளிகை கூடகோபுரங்கள் மீது தொத்துகிறது; இசையில் மயங்குகிறது; ஓடைக் குளிர் மலரோடு உராய்கிறது; முல்லையின் நறுமணத்தை முகருகிறது; இன்னும் மகிழ்ச்சியூட்டி இன்பம் பயப்பன எவை எவையோ அவை யெல்லாவற்றையும் அறிய, காண, கேட்க அவாவுற்று நிற்கின்றது.

களுக்கும் இடையே உள்ள பகுதி சூனியமாகவே இருக்கிறது. அணுக்கரு நியூட்ரான், புரோட்டான் என்ற இருவேறுபட்ட நுண் துகள்களின் சேர்க்கை. அணுவின் நிறையை நிர்ணயப் படுத்துவதும் இந்த அணுக் கருதான். கனம் அதிகமாக ரேடியம், புளுடோனியம், யுரேனியம், தோரியம் ஆகிய தனிமங்களின் அணுக்கருக்கள் நிலையானவையல்ல. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக காலப்போக்கில் இயற்கையாகவே இவை சிதைந்து கொண்டிருக்கின்றன. இச் சிதைவால் ஆற்றல்மிக்க கதிர்கள் வெளிப்படுகின்றன. இந் நிகழ்ச்சியே 'கதிரியக்கம்' எனப்படுவது. புற்றுநோய் போன்ற பெருநோய்களைக் குணப்படுத்த இக்கதிர் வீச்சு பயன்படுத்தப்படுகிறது. நோயற்றஉடல்களில் இக்கதிர்கள் தாக்கினுல் உடல் சதைகளைத்தாக்கி அழிப்பதோடு வேறுபல மாற்றங்களையும் உடலிலே ஏற்படுத்துகின்றன.

உலகில் இத்தகைய வேறுபட்ட தனிமங்கள் 92 உள. அவைகளுள் மிகக்கனம் குறைந்தது நீரகம், கனம கூடியது உரேனியம். இயற்கையில் அணுக்கருக்கள் சிதைவதைப் போலவே செயற்கையிலும் செய்யமுடியும் என்ற எண்ணம் 1896-ல் கென்றி பக்யூரில் ரேடியவினையாற்றலைக் கண்டு பிடித்தபிறகு உறுதியானது. ரேடியம் என்றதனிமம் சிதைக்கப்படும்பொழுது ஈலியம் மின்னுருக்கள் நுண்ணுழைக் கதிரைவிட ஆற்றல் மிக்க வேரெருகதிர் என மூன்று வகை கதிர்கள் வெளிப்படுகின்றன. ஒரு மின்னுரு ஏறத்தாழ ஒரு நீரக அணுவின் 1840 பங்கில் ஒருபங்கு நிறையே உடையது; நாம் கற்பனையால்கூட காணமுடியாத அளவிற்கு மிகச்சிறியது. இந்த மின்னுருவை ஒரு சிறிய மின்னாற்றல் என்று குறிப்பிடலாம்.

புரோட்டான் என்பது நீரக அணுவின் இதயமாகும். இது நேர்மின்னாற்றலைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. நியூட்ரான், அதன் பெயருக்கேற்பவே எந்த ஆற்றலையும் தாங்கிக் கொள்ளாமல் தனியே இருக்கிறது. எனவே இவ்விரண்டின் கூட்டுச்சேர்க்கையான அணுக்கரு நேர்மின் ஆற்றல் உடையது. எதிர் மின்னாற்றல் நேர்மின்னாற்றலையும், நேர்மின்னாற்றல் எதிர்மின்னாற்றலையும் இழுக்கும் தன்மைஉடையது. ஆனல் எதிர்மின்னாற்றல் எதிர்மின்னாற்றலையும், நேர்மின்னாற்றல் நேர்மின்னாற்றலையும்விலக்கும்தன்மைஉடையது என்பது சாதாரண பள்ளிப் பையனுக்கு விஞ்ஞான பாலபாடமாகும். எனவே எதிர்மின்னாற்றலைத் தாங்கியுள்ள மின்னுருபுரோட்டானின் கவர்ச்சி ஆற்றலால் அதைச்சுற்றி வட்டமிடுகிறது. இப்புரோட்டான், நியூட்ரான்களின் எண்ணங்களில் ஏற்படும் மாற்றத்தால்தான் பல தனிமங்கள் இருக்கின்றன. இவைகளின் எண்ணங்களை மாற்றியமைப்பதன்மூலம் ஒரு தனிமத்தை இன்னெரு தனிமமாக மாற்றமுடியும். எடுத்துக்காட்டாக இரும்பைத் தங்கமாக்கலாம்.

1905ல் விஞ்ஞான மேதை ஐன்சுடைன் 'பொருளை சிதைக்கும் பொழுது ஆற்றல் வெளிப்படும்' என்று கூறியபோது யாரும் ஒப்புக் கொள்ளவில்லை. அவர் கூற்றில் நம்பிக்கை கொண்ட சிலவிஞ்ஞானிகள் 35 ஆண்டுகள் முயற்சிக்குப் பிறகு அவர் கூற்றின் உண்மையைச் செயலால் உணர்ந்தனர் 1939ல் டாக்டர் அட்டோகேனும், டாக்டர் பிரிட்சுச்டாச்மனும் யுரேனியத்தின் உட்கருவோடு புரோட்டோன்களை இணைக்க முயன்ற போது மூலப் பொருள்களில் பெருத்த மாறுதலைக் கண்டு வியந்தனர். நீல்ஸ்போர் என்பவர் யுரேனியம் சிதைக்கப் பட்டபோது அத்தனிமம் அழிந்து ஆற்றல் வெளிப்படுவதைக்கண்டு விஞ்ஞான மேதை ஐன்சுடைனின் கொள்கையை வலியுறுத்தினர். நியூட்ரான் போன்ற நுண் துகள்களால் யுரேனிய அணுக் கருவைத் தாக்கினுல் அது பிளவுபட்டு இரண்டு அணுக் கருவாக மாறுகிறது. இச்சிதைவின்போது சில நியூட்ரான்களும், சிறிதளவு ஆற்றலும் வெளிப்படுகின்றன. இப்படி வெளிவந்த நியூட்ரான்கள் இன்னும்சில யுரேனிய அணுக் கருக்களை சிதைத்து அதிக ஆற்றலையும், நியூட்ரான்களையும் வெளிக் கொணருகின்றன. இத்தொடர்வினை மிகமிகக் குறுகிய கால அளவில் கோடிக் கணக்கான அணுக்கருக்களை சிதைத்து, பயங்கரமான ஆற்றலை வெளியிடுகிறது.

1954க்கு உள்ளாக அமெரிக்காவும், இரசியாவும் சப்பான் நாட்டில் வீசப்பட்ட குண்டுகளைவிட பல்லாயிரக் கணக்கான அளவு ஆற்றல் மிக்க நீரகக்குண்டுகளைத் தயாரித்தனர். கனமான அணுக்கருக்கள் பிளவின்போது ஆற்றலை வெளியிட்டது போலவே, கனம் குறைந்த அணுக்கருக்கள் சேர்க்கையின்போது ஆற்றலை வெளியிடுகின்றன. அதோடு மிக வேகத்தோடு நியூட்ரானும் வெளிவருகிறது. கன நீரகத்திலிருந்து ஈலியம் தயாரிப்பது இம்முறையைச் சார்ந்ததே. இச்சேர்க்கை வினை சூரியனின் வெப்பத்தைப் போன்று ஆயிரம் மடங்கு அதிகமான சூட்டில் தான் நிகழும். இந்த வெப்பநிலையை ஏற்படுத்தும் ஆற்றல் யுரேனியம்-235 என்ற ஒரே ஒரு தனிமத்திற்குத்தான் உண்டு. இயற்கையாகக்கிடைக்கும்யுரேனியத்தில் நூற்றுக்கு 0.7 பங்கு அல்லது ஆயிரத்துக்கு ஏழு பங்கு மட்டுமேதான் யுரேனியம் 235 கிடைக்கின்றது. மீதி 99.3 சதம் யுரேனியம்-238 ஆகும். இதை யுரேனியமூலப் பொருளிலிருந்து பல புதிய விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்தி பிரித்து எடுத்து அதில் தொடர்வினை நிகழ்ச்சியை உண்டு பண்ணி இதன் மூலம் ஏற்படும் உயர்ந்த வெப்பநிலையில் நீரகவாயுச் சேர்க்கை வினையை நடத்தி, இவ்வினைப் பின் பயனுக வெளிவரும் நியூட்ரான்களைக்கொண்டு சாதாரண யுரேனியம்-238 ஐ தாக்கிக் கருப் பிளவுகளை ஏற்படுத்தி அதன் மூலம் பிரம்மாண்டமான ஆற்றலை வெளிப்படுத்துவதுதான் நீரகக் குண்டினுள் மறைந்து கிடக்கும் தத்துவம். ஆனல் இதில் பயன் படுத்தப்படும் நீரகம் சாதாரண நீரகமல்ல. நீரகத்தின் இருபங்கு நிறையுள்ள இருகனநீரகமும் மூன்று பங்கு நிறையுள்ள மூக்கன நீரகமும் பயன்படுத்தப்படுகின்றன. அணுக்கரு சிதைவால் அழிவைத்தரும் அணுக்குண்டினுள் அடைக்கப்பட்டிருக்கும் சிதைபடு பொருளின் நிறை 22 ருத்தலுக்கும் 220 ருத்தலுக்கும் இடைப்பட்டது. இதன் திட்டவட்டமான நிறை இராணுவ இரகசியமாகும்.

1938ல் சர்மனியில் துவக்கப்பட்ட அணுப்பிளவு சோதனை 1941-42ல் பெரிய அளவிற்கு முன்னேற்றத்தைத் தந்து 1945 இளவேனிற் காலத்தில் முழு வெற்றியையும் தந்து 1945 ஆகஸ்டில் அதன் அழிவு சக்தியையும் உணர்த்தியது. இப்பொழுதுள்ள நீரகக்குண்டு வீசப்பட்டால், வீசப்பட்ட இடத்தைச் சுற்றிலும் 80 சதுர மைல் பரப்பளவிலுள்ள உயிரினங்களும்கட்டிடங்களும் அவலநிலையை அடைந்துவிடும். 200 சதுரமைலுக்கு மிகுதியான சேதமும், 1000சதுர மைலுக்கு பரவலான சேதமும் ஏற்படும். நியூயார்க் நகரின்மேல் ஒரு குண்டு வீசினுல் ஏறத்தாழ 70 லட்சம் பேருக்கு மரணமும், இருக்கின்ற கட்டிடங்கள் அத்தனையும் தூள் தூளாகும் நிலையும் ஏற்படும். 1955ல் பத்தாயிரம் சதுரமைலை மட்டுமே அழிப்பதற்குத் தேவையான குண்டுகளைக்கொண்டிருந்தஇரசியா இன்று 70,000 சதுரமைல் பரப்பளவையும் தகர்க்கின்ற ஆற்றலுள்ள குண்டுகளைத் தயாரிததுள்ளது. அமெரிக்கா இதைவிட மிகுதியாகவே தயாரித்திருக்கலாம் என்று அனுமானிக்கப்படுகிறது.

அணுக்கருச் சிதைவால் ஏற்படும் 'சட்ரான்சியம்' ஏறத்தாழ 30 ஆண்டுகள் வான வெளியிலேயே சுற்றித்திரியும் ஆற்றலைப் பெற்றுள்ளது. இது பூமியில் படுவதன் மூலம் உணவுப் பொருளையும் குடிநீரையும் நஞ்சாக்குகிறது. இக் கதிரியக்கத்தின் முழு ஆற்றலும் இன்னும் இருநூறு முன்னூறு ஆண்டுகளுக்குப் பின்னுல்தான் தெரியவரும். சாதாரண நுண்ணுழைக்கதிர் மூலம் மருத்துவம் செய்யும் மருத்துவர்கள் பலருடைய குழந்தைகள் கூன், குருடு, செவிடு, நொண்டியாக இருப்பது கண்கூடு. அங்கனமிருக்க இந்த அபாயமான கதிர்வீச்சின் ஆற்றல் உலகில் பெருமளவிற்கு சேதத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. கோபால்ட் என்ற தனிமத்தையும், நீரகத்தையும் பயன்படுத்தி தயாரிக்கப்படும் குண்டு மேலே குறிப்பிட்ட நீரகக் குண்டுகளைவிட பல்லாயிரக் கணக்கான அளவு சேதத்தை ஏற்படுத்தும் வன்மையுள்ளது. இது இன்னும் தத்துவமாகவே இருக்கிறது, செயல்படவில்லை.

இந்த அளவிற்கு அழிவை ஏற்படுத்தும் அணுவை ஆக்க வேலைக்குப் பயனபடுத்தினல் உலக வாழ்வு எவ்வளவு சிறும் சிறப்புமாக அமையும். க்சல்லர் என்ற இடத்தில் அணுசக்தி மூலம் கப்பலை இயக்குவது குறித்து ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இது போனற ஆக்கவேலைகளை வல்லரசுகளும் தொடர்ந்து செய்ய வேண்டும். அணு, சிறிது. இன்னும் சொன்னல் அண்டத்தின் நுண்ணிய மிகச்சிறு கூறு. அது அண்டத்தையே தகர்த்தெரியும் ஆற்றல் பெற்றிருக்கிறது. இதைத்தான் குறள் தந்தகோமானும் 'உருகண்டு எள்ளாமை வேண்டும்' என்றார் போலும். 'பெரியோரை வியத்தலும் இலமே; சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே' என்று புறநானூற்றுப்புலவர் பொன்மொழியும் இதைத்தான் கூறுகிறதோ? இதை ஆள்வோரும் ஆளப்படுவோரும் உணர்ந்தால்தான் உலகில் அமைதி ஏற்பட வழியுண்டு. உலகநாடுகளின் ஒன்றிய வேண்டுகோளுக்கு வல்லரசுகள் பணிந்துதான் தீரும். அணுசிறிது அண்டம் பெரிது. ஆனல் அணுவின் ஆற்றலோ மிக மிகப் பெரிது.

வளர்க அறநெறி! பொலிக அமைதி!

—நாஞ்சில். அன்பொழி

உயிர் வாழ்வைப் பற்றிய கவலைகள் ஒரு புறம் உள்ளன. மக்களுக்கு நோய் வரும்போதெல்லாம் பெற்றோர்க்குக் கவலைகள் தோன்றுகின்றன. உயிரைக் காப்பாற்ற உறுதி அளிப்பவர் இல்லாமையால், மருத்துவர்கள் உறுதி அளித்தாலும் அனுபவம் அதைப் பொய்யாக்குவதால், பெற்றோரின் மனம் ஊசலாடுகிறது. தங்களுக்கே நோய் வரும்போதும் அவர்களின் மனம் இவ்வாறு இருள் சூழ்ந்து கலங்குகிறது, இந்த இருளில் பிறக்கும் மூடநம்பிக்கைகளைப் போக்க அறிவின் தெளிவு வேண்டும். அந்தத் தெளிவு, பதினுயிரத்தில் ஒருவர்க்குத்தான் வாய்க்கிறது.

—மு. வ.

அப் பூங்கொடி நிலையே!

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

"பாக! விரைவாகச் செலுத்து!"

"தேரை விரைவாகச் செலுத்து!"

"தேரினது உறுதியான உருளை, நிலத்தைக் கிழித்தோடும்படியாக விரைவாகச் செலுத்துவாயாக!"

"பாக! நம் மன்னனை எதிர்த்து நின்ற மாற்றரசர்கள் களத்திலே எதிர்த்து நிற்க ஆற்ருமல் மன்னனின் காலடி பற்றினர். மேலும் போரிட முடியாமல் வன்மை குலைந்து நிற்கும் அவர்கள், விலையுயர்ந்த அணிகலன்களை யெல்லாம் கப்பமாகக் கொண்டு வந்து குவித்துவிட்டுப் போரினைத் தாமாகவே நிறுத்திக் கொண்டனர். அரசனும் பகைமை யுணர்ச்சி தணிந்தவனாய் மாற்ருர்க்கு இரக்கங் காட்டி நிற்கிருன். படைத் தலைவனாகிய எனக்கும் வேலை முடிந்தது. இனி இங்கில்லை வேலை. எனவே, தேரை, நீ விரைவாகச் செலுத்துவாயாக!"

"அதோ வானைப்பார்! கருமேகம் சூழ்ந்து கனத்த மழையினைப் பெய்விக்கக் காத்துக் கொண்டிருக்கிறது. 'சோ' வென்னும் ஒலியோடு பெய்த மழை, கார்காலத்தின் வருகையைக் காட்டிவிட்டது. நீர்த்துளிபட்ட நிலம் சேருகி விட்டது. ஓவியம் தீட்டினற்போல் செந்நிறம் வாய்ந்த பட்டுப்பூச்சிகள் நிலத்தில் ஊர்ந்து செல்வதைப் பார். கார்காலத் துவக்கத்தின் அறிகுறிகளெல்லாம் தோன்றிவிட்டன. எனவே, கார்காலம் நம்மைத் துரத்துவதற்கு முன்னர், நீ, தேரினைக் கடிது செலுத்துவாயாக!"

"என் மனக்கண் முன் ஊசலாடிக் கொண்டிருக்கு மொரு காட்சியினைக் காண வேண்டும். ஆகவே தேரை விரைவாய்ச் செலுத்துவாய் பாக!"

*　　*　　*

மாலைப்பொழுது! மந்தைப் பசுக்கள் திரும்பும் நேரம்! கழுத்தில் கட்டப்பட்ட மணிகள் ஒலிக்க, அவைகள் வீடுநோக்கி விரைந்து ஏகும். அந்தப் பசுக்களை மேய்க்கும் இடையர், தமது நீண்டகைக்கோலை இடது விலாவோடு சேர்ந்து அணைத்துக்கொண்டு, கொன்றைக் கனியால் செய்த அழகிய குழலினை ஊதிக்கொண்டு மெல்ல நடந்து வருவார்கள். பச்சிலைகளைப் பறித்துக் கட்டிக் கொண்டு வருவதால், அவர்களது மடிகள் பெருத்து வளைந்து காணப்படும். துள்ளிப் பாயும் இளநடை பயிற்றும் இளங்கன்றுகள், தாம்புக் கயிற்றில் பிணியுண்டு அசைந்தசைந்தாடிக் கொண்டிருக்கும். அவைகளை நினைத்து, பால்வடியும் மடியினைக் கரைக்க வேண்டிப் பசுக்களெல்லாம் கனைத்துக் கொண்டு நாலுகாற் பாய்ச்சலில் வீடுதோறும் சென்று புகும். அரும்புகளெல்லாம் இதழ் விரித்து, மலர்முகம் காட்டி இன்ப மணம் வீசும். இத்தகைய கோலத்தோடு அந்த அந்திப் பொழுது வந்து புகும்!

அந்த அந்திப்போதில் பூங்கொடி போல்வாள் ஒருத்தி நிலா முற்றத்தில் சில சொல்லி நிற்பாள். அவளுடைய சொற்களின் இனிமையை என்னென்று கூறுவது! எனினும் உவமை கூறித் தானே ஆக வேண்டும்! நெல்லிக்காய்களைத் தின்று நீர் குடித்தால் எத்தகைய சுவை எழுகிறதோ, அத்தகைய சுவையுடையன அவளுடைய இனிய சொற்கள். அதுவும் எப்படிப்பட்ட நெல்லிக்காய்! தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனுகிய சிறுகுடி கிழான் பண்ணன் என்னும் வள்ளலொருவன் இருக்கிருனே, அவனுடைய தோட்டத்திலுள்ள சிறிய இலையினையும் புல்லிய விதையினையுங் கொண்ட நெல்லியினது காயாகும்! அந்தக் காயினைத் தின்று நீர் குடித்தால் எழும் சுவையை அப்பூங் கொடியாளின் மென்மையான சொற்கள் எழுப்பும்.

அவள் பொன் அணிபூண்ட தன் புதல்வனைத் தோளில் அணைத்து, அவனுக்குப் பாலமுது ஊட்டி நிற்பாள். அவ்வேளை இளம் பிறைமதி வானில் ஊர்ந்துவரும். அவள் தன்சுட்டு விரலால் அதனைச் சுட்டிக்காட்டி இனியசொற்களை மொழிவாள்.

"ஏ! இளமதியே! நீ என் மகனை நினைத்து கீழே யிறங்கி வருவாயாகில், உனக்கும் பாலமுது கொடுப்பேன்! எங்கே இறங்கு பார்க்கலாம்! வா! வர மாட்டாயா......!" என்று கூறி இளம் பிறையை விரலால் அழைத்து நிற்பாள். அப்போது அவளுடைய கண்கள் ஒருபுறம் மகனை நோக்கும். மற்றோர் புறம் மதியை நோக்கும் வருத்தமும், மகிழ்ச்சியும் ஒன்றையொன்று தாவி அவள் கண்களிலே சுழன்று நிற்கும்.

"பாக! ஒருக்கணித்த பார்வையை இறுபுறமும் செலுத்தி நிற்கும் அப்பூங்கொடியாள் தான் என் உள்ளம் கவர்ந்த காதலி. அவள், என்னைப் பிரிந்திருப்பதால் ஏற்பட்டிருக்கும் வருத்தத்தை மறைக்கும் பொருட்டுப் புதல்வனுக்கு மதியங்காட்டி மகிழ்ச்சி யூட்டிக் கொண்டிருப்பாள்.

"அந்தக் காட்சி அங்கே இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும்.

"தேர் வலவ! அப்பூங்கொடி நிலையினைக் காண என் உள்ளம் துடித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே தேரை விரைவாகச் செலுத்து! செலுத்து விரைவாக!! கடிது செலுத்துவாயாக!!!

விருந்தின் மன்னர்
　அருங்கலத் தெறுப்ப
வேந்தனும் வெம்பகை
　தணிந்தனன் தீம்பெயற்
காரும் ஆர்கலி
　தலையின்று தேரும்
ஓவத் தன்ன
　கோபச் செந்நிலம்
வள்வாய் ஆழி
　உள்ளுரு புருளக்
கடவுக காண்குவம்
　பாக மதவுநடைத்
தாம்பசை குழவி
　வீங்குசுரை மடியக்
கனையலங் குரல
　காற்பரி பயிற்றிப்
படுமணி மிடற்ற
　பயநிரை யாயம்
கொடுமடி யுடையர்
　கோற்கைக் கோவலர்
கொன்றையங் குழலர்
　பின்றைத் தூங்க
மனைமனைப் படரும்
　நனைநகு மாலைத்
தனக்கென வாழாப்
　பிறர்க்குரி யாளன்
பண்ணன் சிறுகுடிப்
　படப்பை நுண்ணிலைப்
புன்காழ் நெல்லிப்
　பைங்காய் தின்றவர்
நீர்குடி சுவையில்
　தீவிய மிழற்றி
முகிழ்நிலாத் திகழ்தரும்
　மூவாத் திங்கள்
பொன்னுடைத் தாலி
　யென்மகன் ஒற்றி
வருகுவை யாயின்
　தருகுவென் பாலென
விலங்கமர்க் கண்ணள்
　விரல்விளி பயிற்றித்
திதலை யல்குலெங் காதலி
புதல்வற் பொய்க்கும்
　பூங்கொடி நிலையே

இச் சொல்லோவியம் அகநானூறு 54-ம் பாடல். தீட்டியவர் மாற்றூர் கிழார் மகனர் கொற்றங் கொற்றனர்.

காதலியை விட்டுப் பிரிந்து, போரிடும் பொருட்டு வெளியேறிய வீரன், போர் முடிந்து வீட்டிற்குத் திரும்பும் போது, அவனது உள்ள நிலை எத்தன்மையதாக இருக்கும் என்பதைக் கற்பனையால் படம் பிடித்துக் காட்டுகிருர் புலவர். அந்தப் படப்பிடிப்பில், புலவர், தன்னை ஆதரித்த கிழான் பண்ணன்என்ற வள்ளலுக்குச் சிறந்ததொரு இடத்தைத் தேடிக் கொடுக்க முயலுகிருர்.

கிழான் பண்ணன் காவிரியாற்றின் வடகரையிலுள்ள சிறுகுடி என்னும் சிற்றூரில் வாழ்ந்த பெருநிலக் கிழவன். அவன் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனுடைய சிறந்த நண்பன். இல்லோர்க்கு இல்லை யெனது கொடுக்கும் வள்ளற் பெருந்தகை. அவன் பசிப்பிணியைப் போக்கி வந்தவன் என்னும் கருத்துப்பட, "பசிப்பிணி மருத்துவன்" என்ற பட்டத்தைப் பாராட்டு மொழியால் கூறி மகிழ்ந்தான் கிள்ளிவளவன் என்னும் அச்சோழ மன்னன். அவனது வள்ளல் தன்மையைச் சிறப்பித்துச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளனைத் தவிர்த்து கோவூர் கிழாரும், மதுரை அளக்கர் ஞாழனர் மகனர் மள்ளனரும் பாடியுள்ளார்கள்.

அத்தகைய பண்பு மேம்பாடு எய்திய கிழான் பண்ணனைத் தக்கதொரு இடத்தில் சிறப்புவிக்க எண்ணிய புலவர், அகப்பொருள் பற்றிய படப்பிடிப்பில், அவ்வள்ளலைக் கொண்டு வந்து நிறுத்துகிருர். காதலியின் இனிய சொல்லுக்கு உவமை கொடுக்கக் கருதியபுலவர், காதலனை நெல்லிக்காயைத் தேடும் படி சிறுகுடி கிழான் பண்ணனின் தோட்டத்திற்குஅனுப்புகிருர். தோட்டத்திற்குள் காதலனைச் செல்ல வைக்கும் முன், அவனுக்குக் கிழான் பண்ணனைத் "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்" என்று அறிமுகப் படுத்துகிருர். பண்ணனைக் காதலனுக்கு அறிமுகப்படுத்தி வைக்கும் வாயிலாகத் தமிழ் மக்களுக்கு என்றென்றும் அறிமுகப்படுத்தி வைக்கிருர்.

காதலன் "அப் பூங்கொடி நிலையை"க்காணச் செல்கிருன்; நாம் சிறுகுடி கிழான் பண்ணனைக் கண்டு நிற்கிறோம்! ○

அசாமின் போர்க்கோலம்,

எங்கும் கண்டனம்! எங்கும் போர் முரசம்! எப்பக்கம் திரும்பினும் நெறித்த புருவமும், நெருப்பை உமிழும் கண்களுமான காட்சி! பட்டி தொட்டி, நாடு நகர் எங்கணும் உணர்ச்சிப் பெருக்கு, உரத்த குரலிலே முழக்கம்! அசாம் மாநிலம் போர்க் கோலம் பூண்டிருக்கிறது. பத்திரிக்கைகள் தணலை வார்த்தைகளாக வடித்தெடுத்து தலையங்கங்களும் கட்டுரைகளும் தீட்டிய வண்ணமுள்ளன. நாடாளும் கட்சியும் எதிர்க் கட்சிகளும் கட்சிசார்பற்றோரும், மற்றும் மனமும் மானமும் படைத்தோர் அனைவரும் இந்தப் போர்முழக்கத்திலே தங்கள் குரலையும் இணைத்தவண்ணமுள்ளனர்.

அசாம் மாநிலம் மலைவளம் நிறைந்தது. அதன் தேயிலை உலகப்பெயர்பெற்றது. இந்தியத் துணைக்கண்டத்தில் அதிக மழை பெய்யும் இடமும் அங்குதான் என்ற அளவில் மட்டுமே இதுவரையில் அசாமைப்பற்றி அறிந்திருந்தோர் யாவரும் வேறு பல புதிய செய்திகளைத் தெரிந்துகொள்ளும் வண்ணம் அசாம் புதுக்கோலம் பூண்டுள்ளது. அசாம் மாநிலத்தில் எண்ணெய் ஊற்றுகள் இருப்பதும் அவையும் முக்கியத்

கள் அனைவரும்ஏகோபித்த குரலில் கேட்டவண்ணமுள்ளனர். இதற்காக மூன்று இடங்கள் நிபுணர்குழுவினரால் சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. அவை. அசாமிலுள்ள கௌஹாத்தி, கல்கத்தா, பீகாரிலுள்ள பரானி ஆகிய மூன்று இடங்களாகும்.

இதன்படி அசாமிலுள்ள கௌஹாத்தியில் அமைப்பதானால் 48 கோடியும், பரானியில் அமைப்பதானால் 50 கோடிக்கு மேலும் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டது. எக்காரணம் பற்றியோ, பீகார் மாநிலத்தில் இந்தத் தொழிற்சாலையை அமைப்பது என்ற முடிவுக்கு டில்லி அரசியலார் வந்தனர். இதற்காகச் சொல்லப்படும் காரணங்கள் அசாமிகளைத் திருப்திப் படுத்துவதாயில்லை. அத்தகைய காரணங்களுள் ஒன்றாக போக்குவரத்து நூதன வசதிகள் அசாமில் இல்லையெனவும் எனவே வேறு இடம் பார்க்கவேண்டிய அவசியம் மத்திய அரசுக்கு வந்தது என்றும் குறிப்பிடுகின்றனர். இதற்கு பதிலளிப்பது போல், அசாம் மாநிலம், ஏற்கனவே அந்த மாநிலத்தில், பல ஆண்டுகளாக வெற்றிகரமாக நடைபெற்று வரும் சிறியதொரு எண்ணெய் சுத்தி

தாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. அரசாங்கம் நிலைக்க முடியாத நிலைமையும், எதிர்க்கட்சிகள் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ளக்கூடிய நிலைமையும் வெகு வேகமாக வளருவதாகவும் அவர்கள் எடுத்துரைத்ததாகத் தெரிகிறது. அசாமின் கோரிக்கையில், பொருளும் பொருத்தமும் இருப்பதாகவும் தங்களுடைய அனுதாபமும் மெத்த உண்டு என்றாலும், இது விஷயத்தில் நேரு பண்டிதர் திரும்பி வரும் வரையில் யாதொரு முடிவும் செய்வதற்கில்லை என்றும் டில்லித்தலைவர்கள் கைவிரித்து விட்டிருக்கிறார்கள். இந்தக் கிழமை 22ந் தேதியை மாநிலம் முழுவதும் எதிர்ப்புதினமாகக் கொண்டாடும்படி, மாநில செயற்குழு கேட்டுக்கொண்டிருக்கிறது. அங்கு கொந்தளித்துக் கொண்டிருக்கும் எதிர்ப்புணர்ச்சி வெடித்துச் சிதறும் நாளாகவும் அதுமாறக்கூடும் என்று பலரும் அஞ்சுகின்றனர். இம்மாதம் 16ந்தேதி கூடிய இந்த செயற்குழு, டில்லியின் இந்தப்போக்கினை, அசாம் மாநில மக்களின் நலனுக்கு துரோகமிழைப்பதாகும் என்று கண்டித்திருக்கிறது. மக்களின் ஏகோபித்த எண்

யுள்ள அசாம் மாநிலம் மேலும் புறக் கணிக்கப் பட்டிருப்பது எல்லோருடைய மனதையும் புண்ணாக்கி விட்டிருக்கிறது. இதனால் இத்தகையகண்டனமும் கொந்தளிப்பும் அங்கு அதிகரிக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்தின் எந்தப்பகுதியில் தொழில் வளர்ந்தாலென்ன! அது நம் பாரதமுழுதுக்கு மல்லவா சொந்தம் என்று 'பாரத மனப்பான்மை' பேசும் புத்திசாலிகள் அங்கு இல்லை. தன்மான உணர்வும் தட்டிக்கேட்கும் ஆண்மையும் அங்கு வீறிட்டெழுவதைக் காண்கிறோம். இங்கேயுந்தான் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருக்கிறார்கள் வீராதி வீரர்கள்! வசைபாடியே எதிர்கட்சிகளை ஒழித்துவிடுமளவுக்கு ஆற்றல் பெற்றவன்கணாளர்கள், நாடே கொந்தளித்து எழுந்து தேவிகுளம், பீர்மேடு தமிழருக்குச் சொந்தம் என்று தீர்ப்புக் கூறிற்று, சட்ட மன்றமும், மக்கள் மன்றமும் அதனையே பிரதிபலித்தன! அமைச்சர்கள் வாக்குறுதிகளும் தந்தனர்! ஆனால் முடிவில் ஒரு 'பிடி சாம்பல்' என்பதுபோல் அத்தனை முயற்சிகளும் விழலுக்கிறைத்த நீராயிற்று. மக்கள் குரல் உதாசீனம் செய்யப்பட்டது. டில்லிப் பீடத்து

அகில இந்தியா'வுக்கு எச்சரிக்கை!

துவம் வாய்ந்து விளங்குவதும் யாவரும் அறிந்தவையே! இயற்கை நலங்கள் நிறைந்த அசாம் அமைதி குன்றிடத்தக்க நிலையில் இதுவரையில் போர்க்கோலம் பூண்டதாக நாம் கேள்விப்பட்டதுமில்லை. இப்பொழுது நாம் அறிகிறோம். அங்கு மலைகள் மட்டுமல்ல, மலைத்தொடர்களும் இருக்கின்றன என்பதையும், இயற்கை வளம் மட்டுமல்ல, மனவளம் மிகுந்த மனிதர்களும், மானங்காக்கும் மறவர்களும் வாழ்கிறார்கள் என்பதையும்!

இந்தியத்துணைக் கண்டத்தின் தலைமைப் பீடமாம் டில்லியை நோக்கிப் போர்க்குரல் எழுப்பியிருக்கிறது அசாம் மாநிலம்; இந்திய அரசினர் எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை நிறுவனம் சம்பந்தமாக எடுத்திருக்கும் முடிவு குறித்தே இந்தக் கொந்தளிப்பு அந்த மாநிலத்தில் எழுந்துள்ளது. இந்திய அரசியலார் இந்தத் தொழிற்சாலையை பீகார் மாநிலத்தில் பரானி என்ற இடத்தில் அமைப்பது என்ற முடிவுக்கு வந்து செயல்படுத்தத் தொடங்கினர் என்ற செய்திகேட்டஆசாமிகள் ஆர்ப்பரிக்கின்றனர். இந்த எண்ணெய் சுத்தம்செய்யும் தொழிற்சாலை அசாமில்தான் நிறுவப்படவேண்டும் என்று அசாமி

கரிப்பு தொழிற்சாலையாம் திக்போய் தொழிற்சாலையை சுட்டிக்காட்டுகிறது.

இந்திய அரசாங்கத்தின் செய்கை பெரியதொரு ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் அசாம் மக்களிடையே உண்டாக்கியிருக்கிறது. மக்களிடையே பரபரப்பும், கோப உணர்ச்சியும் கட்டுக்கடங்காமல் எந்தநேரத்திலும் வெறியாட்டமாக மாறிவிடக்கூடும் என்ற பயங்கரநிலைமை ஏற்பட்டிருப்பதையும் காட்டி, எல்லா அரசியல் கட்சித்தலைவர்களும் டில்லியை எச்சரித்தவண்ணமுள்ளனர். டில்லி அரசாங்கம் நிச்சயம் தன் போக்கை மாற்றிக்கொண்டே தீரவேண்டும் என்று அசாம் மாநிலத்தின் அரசியல் கட்சிகள் அத்தனையும் இந்திய அரசியலாரைக் கேட்டுக்கொணடுள்ளன, இதற்கிடையில் அசாம் மாநில காங்கிரஸ் கட்சித்தலைவரின் தலைமையில் ஒரு குழுவும் டில்லி சென்று முக்கிய தலைவர்களை நேரில்கண்டு நிலைமையைத் தெளிவுபடுத்தி, ஆவன செய்யுமாறு அவர்களைக் கேட்டுக்கொண்டுமிருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன. காங்கிரஸ் தலைவர் தேபர், அவசரப்பட்டு அசாம் மாநில சர்க்கார் ராஜிநாமா செய்துவிடவேண்டாம் என்று கேட்டுக்கொண்டுள்ள

ணத்தை உதாசீனப்படுத்தும் இந்தப்போக்கு மிகவும் எச்சரிக்கப்படவேண்டிய ஒன்று என்று அது கூறுகிறது. இம்மாதம் 28ந்தேதி மேலும் இதுபற்றி தீவிரமான முடிவுகள்செய்ய மாநில மாநாடு ஒன்றினைக் கூட்டவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் அசாம் சட்டசபை இம்மாதம் 13ந் தேதியிலிருந்து 16ந் தேதிவரை இதுபற்றிய விவாதத்தை நிகழ்த்தியிருக்கிறது. அனல் கக்கும் ஆவேசப் பேச்சுக்களும் கனல் கக்கும் விவாதங்களும் நடைபெற்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதிலெல்லாம் முக்கிய பங்கெடுத்துக்கொண்டு ஆளும் கட்சியாம் காங்கிரஸ் முன் நிற்கிறது என்றும் அறிகிறோம். இந்த விவாதத்தை சட்டமன்றத்தில் கொண்டு வந்ததும் காங்கிரஸ்காரர்கள்தான் என்பதையும் செய்திகள் அறிவிக்கின்றன. இத்தகைய பலமான வாதங்களுடன் நடைபெற்ற சட்ட மன்றமும், இதுபற்றி ஏகோபித்த தீர்மானமொன்றை நிறைவேற்றி, அந்த எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை அசாமில் அமைக்கப்படவேண்டிய அவசர, அவசியத்தை வற்புறுத்தியுள்ளது. பொருளாதாரத் துறையில் மிகவும் பின்தங்கி

மதோன் மத்தர்களால்! சிறு விரலையும் அசைத்தார்களில்லை இங்கு அரசோச்சும் சீமான்கள். ஏச்சையும், பேச்சையும் ஏமாற்றத்தையும்டில்லிப் பீடம் தந்த வரப்பிரசாதம் பெரும் பரிசு, என்று ஏற்றுக்கொண்டனர் இந்த ஏந்தல் கள்! சேலத்து இரும்புத் தொழிற்சாலை பற்றி எழுதாத ஏடு இல்லை இங்கு. கேட்காத மேடையில்லை! ஆயினும் என்ன? ஏன் என்று டில்லி கேட்கவில்லை. இங்கிருப்போருக்கு எத்தனையோ அலுவல்கள்! இத்தகைய உதாசீனப் போக்கு டில்லியிடம் அமைந்திருப்பது நமது நலத்திற்கு மட்டு மல்லாமல், நமது எதிர்காலத்திற்கும் ஊறு செய்வதாய் அமைவதை நாம் சுட்டிக்காட்டும்போது மட்டும் நெறித்த புருவத்தினராகின்றனர் இங்குள்ள நமது நண்பர்கள்! நம்மிடம் இவர்கள் காட்டும் வீம்பும், வீராப்பும், ஆண்மையும் ஆயிரத்தில் ஒருபங்கு டில்லி நோக்கித் திருப்பப் பட்டால் எவ்வளவோ பலனிருக்கும்! ஆனால்செய்வரோ! எப்படி முடியும் எஜமானராயிற்றே அங்கிருப்பவர். இவர்களுக்கு கொத்தடிமை செய்யவும், கொடிதாங்கவும், துதிபாடவும், துணைநிற்கவும் மட்டுந்தானே உரிமை! கண்டனம் அங்கே

பட்டாளச்செலவை பாதியாக குறைக்க!

சுதந்திரப் போராட்ட காலத்தில் காந்தியார் தலைமையில் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றவேண்டும்.

—(0)—

விநோபாபாவேயின் வேண்டுகோள்!

—(0)—

"பூதானம்" என்ற பத்திரிக்கையில் விநோபாபாவே அவர்கள் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார்.

"நமது ஐந்தாண்டுத் திட்டம் என்னவாகிறது என்று பாருங்கள். அதற்காக ஏராளமான வரிகளை நான்கு பக்கத்திலும் சேர்க்கவேண்டியிருக்கிறது. தேசிய வளர்ச்சிக்காக, வரிவசூலிப்பது தவறு என்று யாரும் கூறமுடியாது. ஆனால் எந்த வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நமக்கெல்லாம் அதிக வரி போட்டிருக்கிறார்களோ, சுதந்தரமாக உள்ள ஒரு நாட்டு மக்களுடைய வரவு-செலவுத் திட்டம். அதில் ஒரு பாதி இராணுவச் செலவுக்காகப் போய விடப்போகிறது. இதை நாம் மாற்றக் கூடாதா? நமக்குப் பயம், யாரைப் பார்த்து? ருஷியாவைப் பற்றியோ, அமெரிக்காவைப் பற்றியோ, அல்ல ஆனால் பக்கத்திலிருக்கும் பாக்கிச் தானைப் பற்றி தான்! பாக்கிச்தானும் அதிகமாக இராணுவச் செலவு செய்கிறது. ஆகையால் வெறும் தத்துவம் பேசாமல், நாமும் அதைப்போல் செய்யலாம் எனச் செலவிடுகிறார்கள்.

யாராவது ஒரு பாராளுமன்ற உறுப்பினர் எழுந்து இராணுவச் செலவில் பாதியளவு குறைக்கவேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வர வேண்டும். அந்தத் தீர்மானம் நிறைவேறுமா, நிறைவேறாதா என்பது வேறு பிரச்சினை. அது மாதிரி பேச்சைக் கேட்கும்பொழுதே மிகப் பலருக்குப் பயம் வந்துவிடும். அணுப் போராட்ட ஆயுதங்களை இந்தியா வைத்துக் கொள்ள வேண்டுமென்று சிலர் இப்பொழுதே வாதாடுகின்றனர். ஆதலால்தான் நமது வரவு-செலவுத் திட்டம் அடிமைகளுக்காகத் தீட்டப்பட்ட திட்டமேயன்றி, சுதந்தரமாக உள்ளவர்களுக்காகத் தீட்டப்பட்டதல்ல. என்று கூறுகிறேன். ருஷியாவும் அமெரிக்காவும் அதே முறையில் தான் இருக்கின்றன. மனதில் பயம் குடிகொண்டிருக்கும் பொழுது, எப்படி ஒருவனால் சுதந்தரமாக இருப்பதாக நினைத்துக் கொள்ள முடியும்?

வரிவிதிப்பு கூடாது என்று நான் கூறவில்லை. நான் சொல்வதெல்லாம். பட்டாளத்துச் செலவைப் பாதியாகக் குறைத்து விடுங்கள் என்பது தான்!

காந்தியாரின் தலைமையின் கீழ் சுதந்தரப் போராட்டத்தை நடத்திய காலத்தில், இராணுவச் செலவைப் பாதியாகக் குறைத்து விடப் போவதாக வாக்குக் கொடுத்திருக்கிறோம். பட்டாளத்துச் செலவின் கொடுமையைப் பற்றி, நாம் பல ஆண்டுகள் மிகக் கடுமையாகக் கண்டித்து வந்திருக்கிறோம்." ○

கிளம்புகிறது, வீரத்தின் எழுச்சி! கண்ணீர் இங்கே; கையாலாகாதவர்களிடம் நாடு சிக்கியிருக்கும் காரணத்தால்! சேலத்து இரும்புத் தொழிற்சாலை பற்றி செய்தியும் அண்மையில் வெளிவந்திருக்கிறது. சேலத்திலிருக்கும் இரும்புத் தாதுப் பொருள் ஆராய்ச்சிக்காக அனுப்பப் பட்டிருக்கிறதாம் ஜாம்ஷட்பூருக்கு! அங்கு ஆராய்ச்சி முடிவு தெரிந்ததும் இதுபற்றி சென்னை அரசாங்கம் முடிவுக்கு வருமாம். ஏதோ நாங்களும் மறந்துவிடவில்லை என்பது போல் ஏதாவது ஒரு தடவை இது பற்றிப்பேசி வருகின்றனர் இங்குள்ள நமது அமைச்சர்கள். தென்னகத்தின் தொழில் வளர்ச்சி இந்த நிலையில் இங்கே!

இந்தியத் துணைக்கண்டத்தில், குறுகிய மாநில நோக்கம் கொண்ட கட்சிகள் இருப்பதே கூட ஆபத்து என்று வீர முழக்கமிட்டு வரும் நமது காங்கிரசு நண்பர்கள், இப்பொழுது அசாம் எழுப்பும் போர்க் குரலுக்கு என்ன பதில் கூறுவரோ நாமறியோம், அசாம் மாநிலம் பொருளாதாரத் துறையில் வளர, இத்தகு தொழிற் சாலைகள் உதவும் என்று அந்த மக்கள் மனதார நம்புகின்றனர். எனவே தங்களின் உரிமைக்குரலை எழுப்புகின்றனர். ஒவ்வொரு மாநிலமும் தத்தமது மாநில முன்னேற்றத்தில் அக்கரை கொண்டு அதற்காகப் போராட முன் வந்து கொண்டிருப்பதை நாம் பார்த்தவண்ணமிருக்கிறோம். வாயடியும் கையடியும் உள்ள பேர்களுக்கு வளைந்து கொடுப்பது தான் டில்லிப் பீடம் என்ற உண்மையை தெரிந்து கொண்டபின், எந்தத் துறையில் சென்றால் பலனளிக்குமோ அந்தத் துறையில் இறங்கிப் போராடுகின்றனர். ஏமாந்த சோணகிரிகள் எந்நாளும் முன்னேற முடியாது என்ற உண்மை நாளுக்கு நாள் வலுப்படுகிறது. ஒவ்வொரு மாநிலமும் முந்திக் கொள்ளவும் தட்டிக் கேட்டுப் பெறவும் முனைந்துள்ளன. ஏக இந்தியா என்ற சொல் ஏட்டுச்சுரையாக மாறி வருவதையும், இனி இந்த ஏமாற்று வேலைகள் பலிக்காது என்பதையுந்தான் மாநிலங்களில் எழுகின்ற இத்தகைய உணர்ச்சிக் கொந்தளிப்புகள் அறிவிக்கின்றன. அகண்ட பாரதம் என்பது, பாரறிய பறைசாற்றுவதற்குப் பயன்படலாமே யொழிய, கவைக்குதவாது, காரிய மாற்றப் பயன்படப்போவது மில்லை என்பதை, நண்பர்கள் உணரவேண்டும். ஐந்தாண்டுத் திட்டங்கள் என்ற பெயரால் கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொட்டி அழுது வரும் அரசாங்கத்திடம் ஒவ்வொரு மாநிலமும் அதிகப்பலன் பெற எதிர்பார்க்கத்தான் செய்யும்! மேலும் வரி மேல் வரி போட்டு மக்களை வாட்டி வதைக்கும் அரசாங்கத்திடம் அவர்கள் அதிகம் எதிர்பார்ப்பதும் இயற்கையாக எழக்கூடிய எண்ணமாகும். இதனைத்தடுக்கவும் யாராலும் முடியாது. மாநிலவாரியான உணர்ச்சி மேலோங்கும் என்பதிலும் ஐயமில்லை.

அகில இந்தியத்திரை கிழிகிறது! அசாம் அந்தத் துவக்கு விழாவை ஆரம்பித்து வைத்திருக்கிறது! மற்ற மாநிலங்கள் அதனைப் பின் பற்ற எத்தனை நாள் பிடிக்கும்! ○

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் தோல்வியடையும்.

—(0)—

கிருபளானி தரும் காரணங்கள்!

—(0)—

ஐரோப்பாவுக்குப் புறப்படுவதற்கு முன்னதாக பிரசா-சோசியலிசுட் கட்சித் தலைவர் கிருபளானி அவர்கள் பம்பாயில் ஒரு கூட்டத்தில் பேசும் பொழுது, இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் வெற்றியடையுமா என்பதைச் சந்தேகித்து, கீழ்க்கண்ட காரணங்களைக் காட்டிப் பேசினார்.

"திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டுமானால், திட்டத்தின் வேலைச் செலவு அதிகமாகக் கூடாது; அடிப்படை வாழ்க்கைத்தரச் செலவு உயரக்கூடாது; தூய்மை; திறமை, செம்மை ஆகிய பண்புகள் அரசாங்க நடவடிக்கைகளில் காணப்படவேண்டும். இவைகள் ஒவ்வொன்றும் மிக மிக இன்றியமையாதன. ஆனால் இன்றைய அரசாங்கத்தில் இவைகளில் ஒன்றுகூட இல்லை.

அரசாங்கம் போடுகிற எந்தத்திட்டமும் தோல்வியடையாது-அதாவது தோல்வியடைந்ததாக வெளியுலகுக்குத்தெரியாது. அந்தவகையில் பார்த்தால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும் தோல்வியடைந்ததாக வராது. அரசாங்க அதிகாரிகள் தங்கள் அறிக்கைகளைத் தயாரிப்பார்கள்; கொடுத்த கணக்குகளை நிபுணர்கள் கூட்டிப் போடுவார்கள்; திட்டத்தில் எதிர்பார்த்ததைவிட அதிகமாக உற்பத்தி ஏற்பட்டு விட்டதாகவும் ஆகவே திட்டம் வெற்றி பெற்று விட்டதாகவும் அறிவிக்கப்படும்.

போடப்பட்டுள்ளபுதுவரிகள் தாங்க முடியாதன. பார்க்கப் போனால், இப்பொழுதுள்ள வரிகள் சரியாக வசூலிக்கப்பட்டால், புதுவரிகளைப்போடாமலேயே பெற்றுவிடலாம். திட்டத்தை நிறைவேற்றப் புதுவரிகளைப் போடுவதாகக் கூறுகிறார்கள். ஆனால் புதுவரிகளால் வரும் வருமானத்தில் ஒரு தம்பிடிகூடத் திட்டத்துக்கு உதவப்போவதில்லை, ஆனால் புதிய வரிப்பணம் முழுவதும் இராணுவத்துக்கும் அரசாங்கத்தின் நிர்வாகச் செலவுக்கும் செலவழிக்கப் பட்டுவிடுகிறது. மற்றவர்களுக்குச் சிக்கனத்தை உபதேசிக்கும் அரசாங்கம் முதலில் தான் சிக்கனத்தைக் கையாண்டு காண்பித்தால் நல்லது.

இந்தியாவுக்குள்ள அந்நிய நிதி இருப்பு மிகக்குறைந்து வருகிறது. இதில், தற்பொழுதைய நிதிமந்திரி மிகப் பெரிய துரோகத்தைச் செய்துள்ளார். அவர் வர்த்தக மந்திரியாக இருந்தபொழுது, இறக்குமதிக்கு இருந்த தடைகளைத் தளர்த்திவிட்டு, வேற்று நாட்டு பொருள்களை இங்கு ஏராளமாக இறக்குமதியாக உதவினார். அவரே இப்பொழுது நிதிமந்திரியானதும் இப்பொழுது வர்த்தக மந்திரியாக இருப்பவரைப் பார்த்து இறக்குமதியைக் கட்டுப்படுத்தும்படி அறிவுறுத்துகிறார்." 0

நல்ல பணி

இந்தப் பெரு நிலப்பரப்பு வெறுங்காடாகவும் மலையாகவும் நீர்நிலைகள் மிகுந்ததாகவுமே இருந்தது, என்று கூறினால், வரலாற்றுத் தொடர்பைக் கொண்டுள்ளவர்கள் ஆம் என்பர்-ஏனையர் நம்பமறுக்கும் நிலையில் இன்றைய நாட்டின் வளர்ச்சியும் பெருக்கமும் ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறு வளர்ந்து பெருகியுள்ள நாடு நகர் கிராமம் குக்கிராமங்களெல்லாம் மனிதனின் விரிந்த மனப்பான்மை யொன்றுமட்டுமே ஆக்கித்தந்திருப்பவை. தனக்கெனவாழாப் பிறர்க்குரியாளனாக மாந்தன் விளங்கிவந்த காரணத்தாலேயேதான் இந்தப் பெருவளங்காண முடிந்தது.

இத்தகைய சிறப்புக்குரியவனான மனிதன் அவன் இனம் இன்றுள்ள நிலையையும் வாழ்வையும் என்னுகின்றபோது உண்மையிலேயே உள்ளம் வருந்தாமலிருக்க முடியவில்லை. எந்த மனிதன் மக்களின்வளர்ச்சியிலே மிகையான நாட்டங்கொண்டு தன்னைப்பணித்துவந்தானோ, அதேமனிதன் இன்று எதெதற்கோ தன்னையும் தன் இனத்தையும் வகையின்றிப் பணித்துப் பணிந்து நிற்கிறான். சமுதாய வளர்ச்சியின்போது எங்கும் நிலவி இராவைகளெல்லாம் இன்று நிலவாத இடமில்லை.

வரலாற்றுச் சுவடுகொண்டு, வளர்ந்துள்ள தமிழகத்தை நோக்கும்போது இன்றையத் தமிழகம் இரங்கத்தகுவதாய் இலங்குகிறது. தொடக்கத்தில் ஒருசிலராகமட்டுமே இருந்து பெருகிப் பெருக்கிக் கொண்டு வந்துள்ள இனத்தவர் தம் இதயம் இன்னதென அறிந்து கொள்ளும் ஒருவாய்ப்பு நமக்கு எவ்வகையாலும் இல்லை. நமது பழங்குடிப் பெருமக்களின் வரலாற்றை நாம் அறியக்கூடவில்லை என்கின்றபோதும்-நம் வளர்ச்சியின் பெருமை நம் அறிவைத் தொடுகின்றபோதும் திகைப்பும்தேட்டமும் ஏற்படுகிறது. யாவற்றையும் விட இன்று நாம் கண்ணிருந்தும் குருடராய், கருத்திருந்தும் தெளிவற்றோராய் இருக்க நேர்ந்தமை நம்மைக் குத்தாது குத்திக் குற்றுயிராகச் செய்கின்றன.

காடுமேடாக இருந்த நிலங்களைக் கண்டபோது கருத்திலே பட்டவற்றைக் கண்முன்னே ஆக்கிக் காணவேண்டுமென்ற உணர்ச்சி தோன்றினாலும், கருதியவாறு விரைந்து முடிக்கத்தக்க கருவி முதலியன அப்போது வாய்ப்பாக இல்லை. எனவே இயற்கைப் பொருள்களையே கரிவியாகக் கொண்டும் இயற்கை உற்பத்திகளையே தம் செயலாற்றலுக்குரிய நிலைக்களனாகக்கொண்டு செயலாற்ற வேண்டியிருந்தது. இவ்வாறே உண்டி உறையுள் யாவையும் ஆதிகால மனிதன் பெற்றுவந்தானென்பதை வரலாற்றறிவு வளர்ந்துள்ள இற்றை நாளையருக்கு எடுத்துச்சொல்ல வேண்டுவதில்லை.

இத்தகைய பல இயற்கை விளைவுகளின் துணைகொண்டு ஒன்றிரண்டு சிறு கூட்டங்களைச் சமுதாயமாகப் பெருக்கி இன்று கோடிக்கணக்கிலே பெருகியுள்ள சமுதாயம் முதற்காலத்திலிருந்த விரைவும் செறிவுமின்றி வீழ்ந்து கிடக்கின்ற நிலை ஏனென்பதைச் சிறிதே கருத்துட்கொள்ள வேண்டும். சமுதாய வளர்ச்சியிலே குறைவில்லை. நிறைவிலே பழுதில்லை எனினும் வளமில்லை இதன் காரணம் யாதென்று கண்டு களையமுற்படுவாரில்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. தவிரவும் நம்நாட்டில் இல்லாத எப்பொருளும் இல்லை-குறிப்பாக நமது நாகரிகப் பெருக்கத் தேவைகளுள் மிகப் பலவற்றைக்கூட நாம் இங்கேயே பெறத்தக்க நிலையிருந்தும் பெற வழியின்றிப் பிறரை எதிர்நோக்கிவாழ்கின்ற நிலையும்-அந்த நிலை வளர்ச்சியுற்று வரும் வகையும் நோக்க எதிர்காலம் ஓர் எரிமலையின் தொடக்ககாலமாகவே இருக்கிறது. இன்று நம்நாட்டைப் பொருத்த அளவில் நம் நாட்டவர் யார்-பிறநாட்டவர் யார் என்று பகுத்துக்காண முடியாத நிலையும், பிறநாட்டவரென்றும் ஏதோஒருசில வேறுபாடுகளைக் கொண்டு பிறரென்று பகுத்துக்காண நேரிடினும் அவர்களை அவர்களுக்குரிய இடங்களுக்கு அனுப்பி வைக்கச் சமுதாய வாழ்க்கை முறை அமையுமுறை இடந்தரவில்லை ஏன் இந்த அவலநிலை.

தம்பி

பிறநாடுகளில் தங்கள் நாடு தங்கள் பங்கு என்று பிரித்துக் கொண்டவர்களெல்லாம் அவர்கள் நீங்கிய பிறரை வெளியேற்றுங்கள் என்று விரட்டியடிக்கின்றனர். ஆனால் நாமோ வந்தவர்க்கெல்லாம் வரவு கூறி வாயில் திறந்து வரவேற்கக் காத்திருக்கிறோம். இதனால் பிறர் தாமென்ற வேறுபாடு பாராட்ட வேண்டுமென்பதல்ல நம் கருத்து. நமக்குப் பிற நாட்டில் இடந்தேடும் நிலை வேண்டாமென்பதுதான். இதனைக் கூறும்போது நம் நாட்டின் பொருளாதார நிலையும், போதாக் குறைவகையுந்தான் எடுத்துக் காட்டப்படுகிறது. எடுத்துக் காட்டப்படுகிறதே தவிர அவற்றை நீக்கவோ உரியவாறு அமைக்கவோ யாரும் முற்படுவாரில்லை. நம் நாட்டின் பொருளாதார மனைத்தும்தேங்கிக் கிடக்கும் இடங்கள் தேடிக் காணவேண்டிய நிலையும் இல்லை. கண்கூடாக காணமுடிகிறது. பெரும்பான்மையான மான்ய இனம் நிலங்கள் சொத்துக்கள் இவைகள் வரைமுறையற்ற தன்மையில் பலபல இடங்களில் தேக்கப்பட்டிருக்கிறது. அவற்றைப் பொதுவாக்கினால் அதன் மூலம் சேரும் பணம் நாட்டிற்குத் தேவைக்கு மிக்கதாகவே இருக்கும்.

இவற்றிற் கெல்லாம் மூல காரணமாக நம் நாட்டின் மத விழா ஆகியவைகள் பெருவாரியான பணச்செலவுகளுக்கும் சிதைவுகளுக்கும் காரணமாக இருக்கின்றது. அவற்றை நீக்கவும் மாற்றவும் அரசியலாரே பலவகையிலும் முனைய வேண்டும். மாறாக அரசியலார் அதன் வளர்ச்சிக்கு வழிவகுத்துக் கொண்டே செல்கின்றனர். மதச்சார்பும அதன் அடிப்படையில் எழுகின்ற செலவினங்களும் அகற்றப்படுமாயின் அரசியலில் கடன்நிலை ஏற்பட காரணமிராது. எவ்வகையிலும் இந்நாட்டு விளையுள் இந்நாட்டவரின்பால் தானே சேர்கிறது என்ற ஒரு ஆறுதலுரை கூற முற்படலாம். அவை பயனற்றவையே யாகும்.

எந்த ஒருவிளைவும், அந்த விளைவின் மூலத்தில் நிறுத்தினாலல்லாது விளைவின் வேகமும் தொடக்கமும் அற்றுப் போகாது. அதைப்போல இவ்வகையிலும் இதன் மூலகர்த்தர்களே இதனை நிறுத்த முற்படவேண்டும்.

விஞ்ஞானத்தாலும் கருவிகளாலும் விரும்பியவற்றையெல்லாம் செய்து கொள்ளும் வாய்ப்பும் வசதியும் ஏற்பட்டுள்ள இந்நாளிலும் தமக்குத் தாமே ஒத்துக்கொள்ள இயலாத ஒரு மறைபொருள் கூற்றை இன்னும் நிலைநிறுத்தி வருவது அவர்கள்
தம் உள்ளத்திற்கே த
தெனக் கண்டதை மறை
காமல் மறுக்காமல் செய
முறைக்குக் கொண்டு வ
வேண்டும். மதத்தை ந
வோரும் விரும்புவோரு
தொகையில் அதிகமானவ
களாக இருந்தபோதிலும் மத
தைப்பற்றிய மாற்றெண்ண
வளர விடாமல் மேலு
தொடர்ந்து செயலாற்றி வ
பவர்கள் தங்கள் செயலுக்
முற்றுப்புள்ளி வைத்து
கொண்டால் போதும்
வளர்ச்சிதானே மறைந்
விடும்.

எடுத்துக்காட்டாக: இ
றைய அளவில் கோயில்கள்
பணியாற்றி வரும் அர்ச்சக
கள் பட்டர்கள், அனைவ
டைய குடும்பத்தையும் பார்
தால் அவர்களின் வழி
தோன்றல்களாக கோயி
பணியில் ஈடுபட்டிருப்பவர்க
விரல் விட்டு எண்ணத்தகு
அளவினரேயாவர். ஏனையோ
விஞ்ஞானம் மருத்துவம்
பொறிஇயல், வழக்குத் துறை
ஆகிய வகைகளில் தா
ஈடுபட்டிருக்கின்றனர். என்
லும் அவர்கள் முன்னோர
ருப்பவர்கள் பழைய நிலையை
தொடர்ந்தே செய்து வரு
தன்றி மேலும் மேலும் அ
றைப் புதுக்கிக்கொண்டு மி
கின்றனர். இதனை அவாக
நிறுத்திக் கொள்வதென்ப
அவர்கள் வரையிலோ
லாததோ - பெருநட்ட
படுத்தக் கூடியதோ அ
அண்ணாரை வலியுறுத்
வாரும் வலுவிற்கொண்டு
வாரும் எவரும் இருக்க
யாது.

இந்த நல்லபணிக்காகத்
களை ஆயத்தம் செய்துகொ
வார்களே யானால் தன்
பிக்கை வளரும், உழைப்
அதிகரிக்கும். அதன் பய
உடலும் வலுப் பெறும் உ
மும் வலிவுறும். நம் முன்
களின் வாழ்வுக்காலக் க
நிலைகளை இன்று நிகழ்ச்சி
காணவாய்ப்பாகும். ந
பெறுமா இந்த நல்லபணி!

திட்டத்துக்குப் பணம்!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டத்திற்காகக் குறிக்கப்பட்ட கடைசி மாதமான மார்ச்சு மாதத்தில் 22 லட்சம் சேர்ந்ததாக அவர் கண்டார்.

கடைசி நாளான மார்ச்சு 30-ம் தேதியன்று $6\frac{1}{2}$ லட்சம் ரூபாய்கள் வந்து விழுந்தனவாம். ஆக மொத்தம் குறிப்பிட்ட ஒருஆண்டில் 11 மாதம் 3லட்ச ரூபாய் சேர்ந்து கடைசி ஒரு மாதத்தில் மட்டும் 22 லட்சம் சேர்ந்த தென்றால் பொது மக்களுக்கு திடீரென்று ஞானோதயம் வந்து விட்டதாக யாரும் கூறிவிட முடியாது அதிகாரிகளின் நடவடிக்கைகள் அவ்வளவு கடுமையாக கடைசி மாதத்தில் இருந்திருப்பதாகத்தான் யாரும் சொல்ல முடியும் ஆக எட்டவா வட்ட
அதிகாரிகள் மிக சிரமப்ப
மார்ச்சு கடைசியில் 25 ல
ரூபாய்களை போட்டு ஒரு
மாக வெற்றி கொண்டாடி
டார்கள்.

ஆனால் இந்த வெற்றி
வளவு போலியானது என்
அடுத்த ஏப்ரல் மாத ஆரம்
திலேயே தெரிந்து விட்
ஏப்ரல் மாதத்தில் போ
ரூபாயில் 13 லட்சத்தை மக்
திரும்ப எடுத்து விட்டார்
மே மாதத்தில் 8 லட்ச ரூ
கள் எடுக்கப்பட்டன. ஆ
மாதத்திற்குள் 22 லட்
ரூபாயில் 25 லட்சத்தி
மேலாக எடுபட்டு விட்
இவ்வாறு திடீரென உண்
க்கப்பட்ட கணக்கு திடீ
குறைந்து விட்டது. அர
கம் போடுகிற கணக்கு
மிகப்பல இந்த விதமா
தான் முடிகின்றன.

26 நைனியப்பன் தெரு, மண்ணடி சென்னை-1. தமிழ்நாடு) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம்
செழியன் எம். ஏ. —(தொலை பேசி எண் : 5